கொக்குவில் பொதுநூலகம்

# மொட்டுக்களின் மொழிகள்

சிறுவர் பல்சுவைக் களஞ்சியம்

இதழ் 1




வாசிப்போம்:வளர்வோம்
வளர்ந்தும்:வாசிப்போம்

## பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை
3. அச்சமிலாதவன் அம்பலம் ஏறுவான்.
4. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
5. அஞ்சியவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்
6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
7. அடாது செய்தவன் படாது படுவான்
8. அடி செய்கிறது அண்ணன் தம்பி செய்யார்.
9. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்
10. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
11. அடியாத மாடு படியாது
12. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
13. அப்பன் அருமை மாண்டால் தெரியும்
14. அப்பியாச வித்தைக்கு அழிவில்லை
15. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்
16. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
17. அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்று வேண்டும்
18. அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது
19. அல்லல் ஒரு காலம் செல்வம் ஒரு காலம்
20. அவசரக்காரனுக்குப் புத்தி மத்திமம்
21. அழுத பிள்ளை பால் குடிக்கும்
22. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்
23. ஆனைக்கும் அடி சறுக்கும்
24. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
25. உப்பிட்டவரை உள்ளவும் நினை
26. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
27. குரைக்கிற நாய் கடியாது
28. பழகப் பழகப் பாலும் புளிக்கும்
29. தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
30. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

தி.தனுசாயினி
தரம் 4E
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

## அன்னையின் அன்பு



அன்னையைப் போல்
ஒரு தெய்வம் இல்லை அல்லவா?
அன்னையின் அன்பு அற்புதமானது தன்னலமற்றது
எம்மைப்பத்து மாதம் சுமந்து பெற்று பாலூட்டி சீராட்டி
வளர்த்தெடுக்கின்றாள்.
எம் மழலை மொழிகேட்டு அகமிகமகிழும்
அம்மாவிற்கு நிகர் எவரும் இல்லை
நாம் செய்யும் தவறுகளை எல்லாம்மன்னிக்கும் தயாள
சிந்தை கொண்டவர்.
எமக்கு நோய் துன்பம் ஏற்படும் போது துடிதுடித்து விடுவாள்.
எம் அருகிலிருந்து கண்ணை இமை காப்பது போல காத்திடும் கனிவு
உள்ளம் கொண்டவள்.
நாம் அனைவரும் எம் அம்மாவின் சொற்கேட்டு அவள் மனம்
நோகாது நடந்து கொள்வோம்.
“தாயிற் சிறந்த கோயிலுமில்லை” என்பதை மறந்து விடலாகாது.
அன்னையை மதிப்போம்அவளது தன்னலமற்ற அன்பிற்குஅடிபணிவோம்.

கு.சிறிசுபாங்கன்
தரம் 2C
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

## பழத்தில் பிடித்தது– கதை கூறும் கதைகள்

இந்நூல் கதைகளுடன் மட்டும் நில்லாது கதைகள் எண்ணத்தை கருத்தை சொல்லுகின்றது என்பதையும் சிறுவர்களுக்கு “எடுத்துக் கூறுவது ஒரு புதிய முறை. உத்திக் கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புத்திமதியையோ நற்கருத்துக்களையோ கூறுவனவாகவே அமைகின்றன. ஆனால் அக்கதைகள் கூறும் அந்த கருத்துக்களை யாருமே கவனிப்பதும் இல்லை பின்பற்றுவதும் இல்லை. ஆனால் இவ் ஆசிரியர் இந்நூல் மூலம் “வெல்லாம் கலந்த மருந்தினைப்போலவும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போலவும்” நாசூக்காக ஆனால் தெளிவாக பல நற்சிந்தனைகளைப் பல நற்சிந்தனைகள், ஒழுக்கங்களை சிறுவர்களுக்கு கூறுவது ஒரு வித்தியாசமான பாணியாக அமைந்துள்ளது.

. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு பெற்றோரும், ஆசிரியரும் நிச்சயம் வாசிக்க வேண்டிய நூல் “இந்நூல்”. எமது கொக்குவில் பொது நூலகத்தில் இருப்பதனை அறிவதுடன் இதனை தேடி வாசிக்க வேண்டும் என்று கூறவதுடன் இது போல பல்வேறு வகையான மிகச்சிறந்த நூல்களை எமது நூலாக சிறுவர் பகுதியில் அடக்கியுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

“வாருங்கள் வாசியுங்கள்”

## காகத்தின் பேராசை

ஒரு காலத்தில் அழகான புறா ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு வீட்டின் சமயலறைக்கு அருகில் அதன் கூடு இருந்தது. அந்த வீட்டிலுள்ள சமயற்காரர்களுக்கு அந்தப்புறாவை மிகவும் பிடிக்கும். அவர்கள் அதற்கு அடிக்கடி தானியங்களைக் கொடுப்பார்கள். புறாவிற்கும் அந்த இடம் மிகவும் பிடிக்கும். அது அங்கு சந்தோசமாக வாழ்ந்து வந்தது. ஒருநாள் அந்தப் புறாவைக் காகம் ஒன்று பார்த்தது. அதற்கு சமையலறையிருந்த நல்ல சாப்பாடு கிடைப்பதையும் அது பார்த்தது.

அப்புறாவுடன் நட்புடன் பழகியது. அந்த நட்பைக் காரணம் காட்டி அதன் கூட்டில் இடம் தருமாறு காகம் கேட்டது. அதற்குப் புறா “நாம் நட்பாகப் பழகலாம். ஆனால் உணவு தேடுவது என்று பேச்சு வந்தால் நம்முடைய வழியில் தான் தேட வேண்டும்” எனக் கூறியது. காகம் புறாவுடன் நட்புடன் பழகியதற்குக் காரணம் புறாவுக்குக் கிடைக்கும் உணவுதான். புறாவுக்குக் கிடைக்கும் உணவு தனக்கும் கிடைக்க வேண்டும் என எண்ணியது.

அதற்குப்பிறகு அது காத்திருக்க விரும்ப வில்லை. கடைசியாக அந்த சமயலறைக்கு தானே செல்ல நினைத்தது. திருடும் நோக்கத்துடன் அது சமையலறைக்கு அருகில் சென்றது. இங்கு சமயற்காரர்கள் மீன் வறுத்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் அவர்கள் அருகிலிருந்த அறைக்குச் சென்றவுடன் காகம் சமயலறைக்குள் நுழைந்து மீனை எடுக்கப் பார்த்தது. அப்போது அருகிலிருந்த கரண்டி கீழே விழுந்தது. அச்சத்தம் கேட்டு சமையற்காரர் சமயலறைக்கு வந்தனர். மீனை எடுக்க வந்த காகத்தைப் பிடித்துக் கொன்றனர். காகம் பரிதாபமாக இறந்தது.

By Rakshiga
Year -5A
Kokuvil Hindu Primary

## மொட்டுக்களின் மொழிகள்

சிறுவர் பல்சுவைக் களஞ்சியம்

கொக்குவில் பொது நூலகம் தொ.பே : 077 6172092
பிறவுண் வீதி கொக்குவில் 077 9035439

### மொட்டுக்கள் பூக்கும்

மொட்டுக்கள் இதழ் விரித்து அழகான பூவாக மலர்வது போல இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள். அதனால் தான் சிறுவர்களின் செயற்பாடுகள் ஆற்றல்கள், திறமைகள், கிரகிக்கும் தன்மை என்பவற்றை வெளிக் கொண்டு வருவதற்காகவும், சுயதேடல் சுயசிந்தனைகள் என்பவற்றை சிறுவயதி லேயே ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி யாகவும் வாசிப்பு மாதத்தில் “மொட்டுக்களின் மொழிகள்” என்ற இந்த சிறுவர் பத்திரிகை கொக்குவில் பொது நூலகத்தினால் வெளியிடப் படுகின்றது.

வாசிப்பு மாதத்தில் வாசிப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு “இளமையில் கல்வி சிலையில் எழுத்து ” என்பதற்கு ஏற்றவாறு வாசிப்பதோடு நின்றுவிடாமல், சிறந்த வாசிப்பாளனே சிறந்த எழுத்தாளனாக முடியும் என்பதனால் சிறுவர்களின் வாசிப்பாற்றலையும் எழுத் தாற்றல் களையும் தூண்டுவதாக நிச்சயம் இந்த மொட்டுக்களின் மொழிகள் பத்திரிகை அமையும். இனி வரும் காலங்களில் மொட்டுக்களின் கிறுக்கல்களைக் கொண்ட இப்பத்திரிகை இன்னும் கூடுதலான மொட்டுக்களை இணைத்து கூடுதலான தரமான ஆக்கங்களைத் தாங்கி வரும் என்பது உறுதி.

இதனுடைய இன்னுமொரு சிறப்பம்சம் மொட்டுக்களின் கிறுக்கல்களுடன் மொட்டுக்கள் பூக்களாக மலர்வதற்கு பசளை களாகவும் உரங்களாகவும் விழிப் புணர்வூட்டு வதாகவும் பெரியோர்களின் கட்டுரைகள், கதைகள் அமைந்துள்ளன. அனைத்து சிறார்களும் கொக்குவில் நூலகத்துடன் இணைந்து சிறந்த பயனைப் பெற்று நல்ல சிறார்களாகவும், இலட்சியமுள்ள மாணவர் களாகவும், உயர்ந்த மனிதர்களாகவும் மிளிர வேண்டும் என்பது எமது அவா.

இவ் சிறுவர் பல்சுவைக் களஞ்சியமான மொட்டுக்களின் மொழிகள் என்னும் சஞ்சிகை வருடம் ஒருமுறை வெளிவருவதற்கு ஆக்கங்கள் தருபவர்கள் 01.06.2015க்கு முன்னர் கொக்குவில் பொது நூலகத்தில் சமர்ப்பிக்கவும். முன்பள்ளி மாணவர்களும், ஆண்டு 8க்கு உட்பட்ட மாணவர்களும் ஆக்கங்களை சமர்ப்பிக்கலாம். ஆக்கங்களை சமர்ப்பிக்கும் மாணவர்கள் தெளிவாக பெயர், வகுப்பு, பாடசாலைப் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடவும்.

நூலகத்தில் சிறுவர் பகுதியில் அங்கத் தவராக இணைவதன் மூலம் எப்பகுதியில் உள்ளவர்களும் ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியும். நூலகத்தில் சிறுவர் பகுதியில் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் சிறுவர் வட்டத்தில் இணையமுடியும். சிறுவர் வட்டத்தில் இணைந்து கொள்ளும் சிறுவர்கள் நூலக நிகழ்வுகள் செயற்பாடுகள் போட்டிகள் என்பவற்றில் ஈடுபடமுடியும்.

ஆண்டு எட்டுக்கு மேற்பட்டவர்கள் விரிவுரையாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், சமூக ஆர்வாலர்கள், சிறுவர்கள் தொடர்பான கட்டுரைகள், கதைகளை குறிப்பிட்ட திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

கி.அனிதா
நூலகர்
கொக்குவில் பொது நூலகம்.

## இணையம் (இன்டெர்நெட்)



இன்று உலகமே விரல் நுனிக்குள் வந்து விட்டது என்று கூறுவோம். இதற்கு முக்கிய காரணி இணையம் என்கிற இண்டர்நெட் அதிக பரப்பளவு இடத்தையும், அதே நேரத்தில் அதிவேகத்தில் தொடர்பு கொள்ளவும் பயன்படுகிற தொலைத்தொடர்புச் சாதனம் இணையம் என்றால் அது மிகையாகது.

ஒரு அலுவலகத்தில் உள்ள பல கம்ப்யூட்டர்கள் தொடர் இணைப்பின் மூலம் இணைக்கப்பட்டுள்ளமை இன்டெர்நெட் என அழைக்கப்படும். பல இடங்களில் உள்ள கம்பியூட்டர்கள் செயற்கைக்கோள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது இணையம் (இண்டர்நெட்) எனப்படும்.

பல கணிப்பொறிகளை ஒரு தலைமை கம்யூட்டருடன் இணைத்து. அதிலிருந்து தகவல்கள் செயற்கைக் கோளுடன் செல்கின்றன. செயற்கைக் கோளிலிந்து வேறொரு தலைமைக் கணிப்பொறிக்குச் செல்லும் தகவல்களானது அத்னுடன் இணைக்கப்பட்ட மற்ற இச்சேவையை வி.எஸ்.என்.எல் போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களும் செய்து வருகின்றன.

இணையம் இன்றளவில் மிகப்பெரிய தகவல் தொடர்புசானமாக திகழ்கிறது என்றால் அது மிகையல்ல. செய்தி நிறுவனங்கள் தங்கள் செய்திகளை நாளிதழ்களுக்கும் தொலைக்காட்சிக்கும் அனுப்ப இணையத்தை தேர்ந்தெடுத்து இருக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட துறைபற்றி இணையத்தளத்தின் முகவரியை நாம் அறிந்து கொள்ள சில தேடு இணையத்தளங்களும் உள்ளன. இவற்றின் உதவியுடன் தமக்குத் தேவையான இணையத்தளத்தை சென்றடைய முடியும்.

தகவல் தொழில்நுட்பத்தின் உயர்ந்த நிலையான இணையத் தளத்தின் கண்டுபிடிப்பு உலகிற்கே நன்மை பயப்பதாக அமைந்துள்ளது. அதை நல்லவண்ணம் பயன்படுத்தி பயனடைவோம்.

S. ஜனார்த்தனன், தரம் - 5B
கொக்குவில் இந்துக் கல்லூரி

## குடையின் சுயசரிதை



நான் பிறந்த தொழிற்சாலையில் பல சகோதரர்களுடன் பிறந்தேன். என்னை ஒரு பெரியவர் வாங்கிச் சென்றார். அவருக்கு நான் பாதுகாப்பாக இருந்தேன்.அவருக்கு மழையில் நனையாமலும் வெயில் சுடாமலும்பாதுகாப்பாக இருந்தேன். அவரது வயோதிப காலத்தில் ஓர் ஊன்றுகோலாகவும் பயன்பட்டேன். அவர் காலமானதின் பின்பு என்னை ஒருவரும் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். வீடு துப்புரவு செய்யும் போது என்னைத் தூக்கி குப்பைத் தொட்டியில் வீசிவிட்டார்கள். என்னுடைய இந்தப் பரிதாப நிலை வேறு ஒருவருக்கும் வரக்கூடாது.

அஸ்வினி, தரம் 4 E,
யா. கொக்குவில் இ.ஆ.பா.

## அகம்பாவத்தால் ஏற்பட்ட அழிவு

ஓர் ஊரிலே சுதன், மதன், வதன் என்னும் மூன்று நண்பர்கள் இருந்தார்கள். சுதனும் மதனும் மிகவும் புத்திசாலிகள் வதனோ புத்திசாலித்தனமுடையவன். ஆனால் அகம்பாவம் உடையவன். ஒருநாள் அவ்வூரிலே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக மக்கள் எல்லோரும் வேறு ஊருக்கு சென்றார்கள். அப்போது சுதனும் மதனும் அவர்களுடன் கூடிச்செல்வதற்காக வதனையும் அழைத்தனர். ஆனால் வதனோ நான் பிறந்த ஊர் இதனைவிட்டு நான் வேறு எங்கும் வரமாட்டேன் என்று அகம்பாவம் கொண்டான்.

சுதனும் மதனும் சென்றனர். மதனுடைய அம்மா அப்பா வந்து கேட்டபோதும் அவன் மறுத்தான். ஒரேநாளில் வெள்ளள்ளத்தினால் மூழ்கடித்துவிட்டது. இதன் காரணமாக அக்கிராமத்தில் இருந்த எல்லோரும் இறந்தனர். மக்கள் எல்லோரும் தங்களது ஊருக்கு வந்து பார்த்த போது மக்கள் இறந்து கிடப்பதை கண்டு அழுதனர்.

அங்கிருந்து வந்து கொண்டிருந்த சுதனும் மதனும் வதனுடைய அம்மாவும் அப்பாவும் வதனும் இறந்து கிடப்பதைக் கண்டு தங்களுடைய உற்ற நண்பனை இழந்து விட்டோம் என்று கண்ணீர் விட்டு அழுதனர்.

எனவே மாணவர்களாகிய நாங்கள் சிறுவயதிலிருந்து அகம்பாவம் இல்லாது வாழ்வோமாக!

லோ. துஷாந்தினி, தரம் - 06
யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம்

## Blue Stars And Gold

While walking through the trams and
cars I chanced to look up at the sky,
And saw that was full of stars !

So starry - sown! A man could not, with
any care, have stuck a pin Through any
single vacant spot.

And some were shining furiously;
And some were big and some were
small;
But all were beautiful to see;

Blue stars and gold! A sky of grey !
The air between a velvet pall !
I could not take my eyes away !

And there I song this little poem
Most awkwardly ! Because I was
Standing between a car and a train !

James Stephens

S. Kanapriya
Year - 04,J/Kokuvil /H/P/S

## அன்னை தெரேசா



சா. பேரிக்கிழாரன்ஸ்,தரம் 8D
யா.கொக்குவில் இந்துக் கல்லூரி.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது நாவுக்கரசரின் நன் மொழி. இதற்கேற்ப வாழ்நாழ் முழுவதும் தொண்டு செய்வதே குறிக்கோளாய்க் கொண்டு வாழ்ந்தவர் தெரேசா அம்மையார். தெரேசா அம்மையார் யூக்கோசெலாவாக்கியா நாட்டில் 27.08.1910 ஆம் ஆண்டு பிறந்தார்.


கிறிஸ்தவக் கொள்கைகளையும் மதத்தையும் பரப்ப வந்த அம்மையார் மனிதாபிமான எண்ணத்தால் தொண்டுகள் செய்ய ஆரம்பித்தார். அம்மையார் முதலில் கல்கொத்தாவில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராக கடமையாற்றினார். மிகப் பாழடைந்த காளிகோயிலில் அம்மையார் தன் பணியைத் தொடங்கிய போது அக்கோயிலின் பூசாரி ஒருவன் அம்மை யாரைப் பலிகொடுக்க ஆயுதம் ஏந்தி வந்தான். ஆனால் தெரேசா அம்மையாரின் அருள் சக்தியால் மனம் மாறி பிற்காலத்தில் அம்மையாரின் அணுக்கத் தொண்டனானான்.

இறைவன் தன்னை எல்லா இடங்களிலும் மக்கள் காணவேண்டும் என்பதற்காகவே பெண்களைப் படைத்தான் . அத்தகைய பெண்களில் பெரும் தெய்வமாக விளங்கியவர் அன்னை தெரேசா ஆவார். அம்மையார் தன்னைச் சேர்ந்த ஏழைகளுக்கு உதவி புரிய ஒரு திமிர் பிடித்த பணக்கார மனிதனிடம் ஏழைகளுக்கு ஏதேனும் கொடுங்கள் என்று கேட்டார். உடனே மனம் வருந்தி திருந்திய அம்மனிதன் ஒரு கட்டடத்தை அம்மையாருக்கு அளித்தார். அம்மையார் ஏழைகளுக்காக தான் அவமானப்பட்டு அவர்களை வளர்த்தார்.

குஷ்ட ரோகம் பிடித்த சீழ் உடைய புண்களையுடைய நோயாளிகளை எல்லாம் கொஞ்சமும் அருவெருப்பில்லாமல் தன் கைகளால் தாங்கினார்.அவருடைய தொண்டைப்பாராட்டி அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அதன் வருவாயைக் கூட அம்மையார் ஏழைகளுக்குக் கொடுத்தார். இறுதியில் அவருடைய சொத்தாக அவருடன் இருந்தவை ஒரு செருப்பும் ஒரு வாளியும் மட்டுமே. நாமும் சமூகத்தொண்டில் ஈடுபடுவோம்.

# நீரைச் சேமிப்போம்

பஞ்சபூதங்கள் என்று சொல்லப்படும் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றால் ஆனது தான் இந்த பிரபஞ்சம். இந்த பூமி பிரபஞ்சத்தின் இயக்கமும் இதை சார்ந்தே இருக்கிறது. உலகின் மொத்த நிலப்பரப்பு 21 சதவீதம்தான். உலகை சூழ்ந்து நிற்கும் தண்ணீரில் 97 சதவீதம் உப்புத் தண்ணீர். வெறும் 3 சதவீதம்தான் நல்ல தண்ணீர். அதிலும் 2 சதவீதம் பனிக்கட்டியாய் பயன்படுத்த தகுதியற்று கொட்டிக் கிடக்கிறது. குடிநீர், விவசாயம் உள்ளிட்ட அனைத்து தேவைகளுக்கும் 1சதவீத தண்ணீர்தான் இருக்கிறது. ஒரு சதவீத நீர் ஆதாரத்தை வைத்துத் தான் ஒட்டுமொத்த மனித சமுதாயமும் வாழ்கிறது. ஆனால் மாறிவரும் தட்ப வெப்பநிலை மாற்றங்கள் நீருக்காய் கண்ணீர் சிந்தும் காலம் வரும் என்பதை நினைவு படுத்துகின்றன.



நீரைக் கிணறு, குளம், ஆறு, மழை, நீரூற்றுக்கள் மூலம் பெறுகின்றோம். நீரின்றி எந்த வேலையும் செய்ய முடியாது. நீரை நாம் வீண் விரயஞ் செய்யக்கூடாது. தாகம் தீர்த்திட, உணவு சமைத்திட, உடலைக்கழுவிட உடைகள் தோய்த்திட நாம் நீரைப் பயன் படுத்துகின்றோம். நீர் நிலைகளை வீணாக்கக்கூடாது. உலகில் பசுமை நிலைக்க வேண்டுமாயின் நாம் நீரைச் சேமிக்க வேண்டும். ஒரு சிறு துளி நீரும் பெறுமதி மிக்கது என்பதையே அன்று மகா பராக்கிரமபாகு "மழை நீரில் ஒரு சிறு துளியேனும் வீணாக கடலில் கலக்க விடக் கூடாது". எனக் குறிப்பிட்டு பராக்கிரம சமுத்திரத்தைக் கட்டினான். எனவே நாம் கிடைத்தற்கரிய வளமான நீரை சிக்கனமாகப் பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும் அந்த வகையில் நீரைச் சேமிக்கும் வழிமுறைகளாக பின்வரு வன வற்றைக் கூறலாம்.

1. அன்றாட வாழ்க்கையில் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவிடுதல்
2. மழை நீரை வீடுகளில் தரையிலும் கிணற்றிலும் சேகரித்தல்
3. வீட்டுக்கு வீடு மரம் வளர்த்தல்
4. ஏரி குளங்களைச் சீரமைத்து பராமரித்தல்.
5. வீதி ஓரங்களில் மரம் நடுதல்
6. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டங்களை செயற்படுத்தல்

எனவே இயற்கை அளிக்கும் இனிய கொடைகளில் ஒன்றான நீரினைச் சேமித்து எதிர்காலச் சந்ததியினரும் பயன்படுத்த உதவுவோமாக.

மு.ஆரண்யா
தரம் 4B
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை




# சேவலும் கிளியும்



சேவலும், கிளியும், நல்ல நண்பர்கள். ஒரு முறை சேவல் குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கும் போது ஓர் இரத்தினக்கல் கிடைத்தது. அதைச் சேவல் மிகவும் பத்திரமாகத் தன் கூட்டில் வைத்துக் கொண்டது.

ஒரு முறை கிளி அங்கு வந்தது. சேவல் தனக்கு ஓர் இரத்தினக்கல் கிடைத்ததாகக் கூறியது. கிளி அதைப் பார்த்துவிட்டுத் தருகிறேன் தா என்றது. முட்டாளான சேவல் இரத்தினக் கல்லைக் கொடுத்தது. கிளி அதை தனது கூட்டில் மறைத்து வைத்தது. சேவலுக்கு மரத்தில் ஏறமுடியாது என்பதால் விறகு வெட்டியிடம் சென்று கிளியின் வசிப்பிடமான மரத்தை வெட்டச் சொன்னது. விறகுவெட்டி முடியாது என்றான். உடனே, அரசனிடம் சென்று விறகு வெட்டியைத் தண்டிக்குமாறு கூறியது. அரசன் முடியாது என்றான். அது உடனே! அரசியிடம் சென்று அரசனை ஏசுமாறு கூறியது. அரசி முடியாது என்றாள். எலியிடம் சென்று அரசியின் விலைமதிக்க முடியாத உடையைக் கிழிக்குமாறு கூறியது. அது முடியாது என்றது. அது பூனையிடம் சென்று எலியைப்பிடித்து உண்ணுமாறு கேட்டது. இது முடியாது என்றது. சேவல் நாயிடம் சென்று பூனையைக் கடிக்குமாறு கூறியது. நாய் முடியாது என்றது. உடனே சேவல் விறகிடம் சென்று நாயை அடிக்குமாறு கூறியது. விறகுமுடியாது என்று கூறியது. அது நெருப்பிடம் சென்று விறகை எரித்து விடுமாறு கூறியது. நெருப்பு முடியாது என்றது. அது நீரிடம் சென்று நெருப்பை அணைத்து விடுமாறு கூறியது. நீர் முடியாது என்றது. உடனே யானையிடம் சென்று நீரை அசுத்தமாக்கும் படி கேட்டது. யானை முடியாது என்றது.



இத்தனை பேரும் முடியாது என்று கூறியதை நினைக்கும் போது சேவலுக்கு அழுகை வந்தது. சேவல் அழும் சத்தம் கேட்டு அவ்வழியால் வந்த எறும்பு என்ன உதவி வேண்டும் எனக் கேட்டது. சேவலும் அதன் கதையைக் கூறியது. எறும்பு சொன்னது யானையின் தும்பிக் கையில் நான் புகுந்து அதற்கு வேதனையை வர வழைக்கின்றேன் என்றது. இதைக் கேட்ட யானை வேண்டாம் நீரை நான் அசுத்த மாக்குகிறேன் என்றது. நீருக்கு இதைக் கேட்டதும் பயம் வந்து நெருப்பை அணைக் கிறேன் என்றது. இதைக் கேட்ட நெருப்பு வேண்டாம் விறகை நான் எரிக்கிறேன் என்றது. விறகோ நான் நாயை அடிக்கிறேன் என்றது. இதைக் கேட்ட நாய் நான் பூனையைக் கடிக்கிறேன் என்றது. எலி வேண்டாம் நான் அரசியின் உடையைக் கிழிக்கிறேன் என்றது. இதைக் கேட்ட அரசி நான் அரசனை ஏசுகிறேன் என்றாள். அரசன் வேண்டாம் வேண்டாம் நான் விறகு வெட்டியை நாட்டைவிட்டு வெளியேற்றுகிறேன் என்றான். விறகு வெட்டியோ வேண்டாம். நான் கிளியின் வசிப்பிடமான மரத்தை வெட்டுகிறேன் என்றான். கிளியும் பயத்தில் இரத்தினக் கல்லை வீச சேவல் பெற்றுக் கொண்டதுடன் அதைப் பத்திரமாக மறைத்து வைத்தது.

யோ. கிஷார்த்தன்
தரம் - 6E
யா/இந்துக் கல்லூரி.

# வாழை

உலகிலேயே அதிக பயன் தரும் தாவரம் வாழை என்று கூறப்படுகின்றது. வாழையின் சிறப்பு என்னவென்றால் வாழை மரத்தின் அனைத்துப் பாகங்களும் மக்களுக்குப் பயன் படுகிறது. உலகின் முதல் இயற்கை உணவு என்ற பெயரும் இதற்கு உண்டு. எனவே மனிதனுக்குப் பயன் தரும் மரங்களில் வாழைமரம் பிரதானமாகும். வாழைமரத்தில் பல்வேறு வகைகள் உண்டு.

அவை
செவ்வாழை
மலை வாழை
ரகதாளிவாழை
பச்சைவாழை
மொந்தன் வாழை
நேந்திர வாழை
கதலி வாழை
கற்பூர வள்ளி வாழை
பூவன் வாழை
போயன் வாழை
கப்பல் வாழை
ஏலரிசிவாழை

வாழைமரத்தின் இலை, பூ, காய், கனி, தண்டு ஆகிய பகுதிகள் யாவுமே மனிதனுக்குப் பயன் தருகிறது. அவற்றினைத் தனித் தனியாக நோக்குவோம்.



மு.சரண்யா
தரம் - 3C
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

வாழையிலை

வாழையிலையில் உணவு பரிமாறுவது தமிழர்களுடைய விருந்தோம்பல் கலாசாரத்தில் முதலிடம் வகிக்கிறது. சுபகாரியங்களில் கும்பம் வைப்பதற்கு தலைவாழையிலை பயன்படுத்தப் படுகின்றது. தீ விபத்துக் குள்ளானவர்களை வாழையிலையின் மீது படுக்கவைத்தால் தீக்காயத்தின் எரிச்சலைப் போக்கும். வாழையிலை ஓர் கிருமி நாசினி ஆகும். உணவில் உள்ள கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது.

வாழைப்பூ

வாழைப்பூவைச் சமைத்து உண்டால் இரத்தத்தில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புக்களைக் கரைத்து வெளியேற்றும். இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரைப் பொருளை கரைத்து வெளியேற்றவும் வயிற்றுப் புண் ஆறவும் வாழைப் பூவைச் சமைத்து உண்பது சிறந்த தாகும்.

வாழைக்காய்.

வாழைமரத்தின் சில இனங்களில் மொந் தன் வாழைக் காய் சமையலுக்குப் பயன்படுகின்றது. வாழைக்காய் பொரியல் , பஃஜி, சம்பல் என பல விதமான சமையலுக்குப் பயன்படுகின்றது.

வாழைப்பழம்

முக்கனிகளில் ஒன்றாக விளங்கும் வாழைப்பழம் ஏழை பணக்காரர்களாலும் வாங்கப்படும் பழமாகும். இதனை ஏழைகளின் அப்பிள் எனவும் கூறுவர். தமிழர்களின் சுப காரியங்களின் போது வாழைப் பழம் முதன்மை பெறுகின்றது.

வாழைத்தண்டு

வாழையின் தண்டு மருத்துவப் பொருளாகப் பயன்படுகிறது. நார்ச்சத்து நிறைந்த வாழைத்தண்டு சிறுநீரகத்தின் செயல்த் திறனை அதிகரிக்கின்றது. அதிக உடல்பருமன் கொண்டவர்கள் வாழைத் தண்டை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

இந்த வகையில் வாழையின் பயன்களை நாம் அறியமுடிகின்றது.

## கண்டுபிடிப்புக்களும் அதைக்கண்டுபிடித்தவர்களும்

1தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்?
அலெக்ஸாண்டர் கிரகம் பெல்

2.இணையத்தை கண்டு பிடித்தவர்?
வின்செண்ட் சேர்ஃப் பொப்கான்

3.செல்லிடத் தொலைபேசியைக் கண்டு பிடித்தவர்?
பிராண்டன் பெச்சர்

4.தந்தியைக் கண்டு பிடித்தவர்?
ஹோர்ஸ்

5.தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர்?
ஸோன் லூகி பேயர்ட்

6.மின்குமிழைக் கண்டுபிடித்தவர்?
தோமஸ் அல்வா எடிசன்

A.Rakshoiga
Year - 5A
Kokuvil Hindu Primary

## எனது அம்மா

1. எனது அம்மா அன்பானவர்.
2. எனது அம்மாவின் பெயர் சைலஜா.
3. எனது அம்மா என்னை அன்பாகவும் பண்பாகவும் அரவணைத்து உணவு ஊட்டி பாடசாலைக்கு அனுப்பி வைப்பார்.
4. அம்மாவை மாதா, அன்னை, என்றும் அழைக்கலாம்.
5. ஆசைப்பட்ட பொருட்கள் எல்லாம் கடையில் வாங்கலாம். அம்மாவை மட்டும் வாங்க முடியாது.

பி. மதுசாயினி
சரஸ்வதி முன்பள்ளி, கொக்குவில்

## A Trip you enjoy

" Koo" sound in the time when the strething of the sun and the intercity train arived in the station of Jaffna. As it was the 3rd day of December holiy day. All the children were going to the ground with the equipment & we were going to catch the train to colombo.

I took my own bag which was full of my dresses and my digital camera. That day was the first time which I go to colombo by train. We arrived at kokuvil station and we started our journey in the Jarl thevi train.

I thought it's very easy to arrive colombo by train compairing with the bus. but the train stopped at every stations and it arrived at colombo station nearly 7½ hours ago

We arrived our aunt house by the three wheeler. I and my sisters are played with my cousin brother. In few hours the moon said " Hay! " to me and we went to sleep. creeching sound were hearing at the time the smell of cup of tea as it is the morning bed coffe. My parents went to many places in colombo, specially zoo and galle face beach. In that day we went to many places in colombo and I got many photos and video clips in my camera. We enjoy that trip wonder fully. After a week enjoyment we return to Jaffna again by train. I realy glad when I remember it.

By- Kamaleswara sharma. Nivethika
Year -7F
J/ Vembadi Girls' High School

# விடுகதைகள்

1. உரிக்க உரிக்கத் தோல் அது என்ன?
வெங்காயம்

2. வெள்ளை மனிதனுக்கு கறுப்புத் தொப்பி அவன் யார்?
தீக்குச்சி

3. நாலுகால் உண்டு நடக்கத் தெரியாது நான் யார்?
கதிரை

4. உயர எறிந்தால் தரையில் விழுவான், தரையில் எறிந்தால் உயர விழுவான் அவன் யார்?
பந்து

5. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான், வெளியே வந்தால் விரைவில் மடிவான். அவன் யார்?
மீன்

6. மழையில் நனைவேன் வெய்யிலில் காய்வேன் வீட்டில் சுருங்குவேன் நான் யார்?
குடை

7. தூய்மையானால் கறுப்பாவேன். அழுக்கானால் வெள்ளையாவேன் நான் யார்?
கரும்பலகை

8. பல் இருக்கும் கடிக்காது அது என்ன?
சீப்பு

ஜெ. ஜானிகா, 2A
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

# வாழிய தமிழ்மொழி

நாம் தமிழர். நமது தாய்மொழி தமிழ். அது தேனினும்இனியது. இதனால்த்தான் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியாரும். "தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாரதிதாசனும் பாடியுள்ளார்கள். உலகில் உயிருக்கு மேலானது எதுவுமே இல்லை. அந்த உயிரினும் மேலானது தமிழ் என்னும் போது நாம் மிக்க பெருமை அடைகிறோம்.

உலகின் பொய்யா மொழிப் புலவர் என்று போற்றப்படும்திருவள்ளுவர்பாடிய திருக்குறளும் தமிழே. கம்பன், இளங்கோ பாடிய காவியங்களும் தமிழே. மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டிய மன்னர்கள் அரும் பாடு பட்டு வளர்த்ததும் தமிழையே. சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் அறிவுரை கூறிய ஔவையார் பாடியதும் தமிழ் மொழியிலேயே. எமது நாயன்மார் பாடிய தேவார திருவாசகங்களும் தமிழே. எம் நாட்டுப் பெரியார்கள் ஆறுமுகநாவலர். சோமசுந்தரப்புலவர், விபுலானந்தர் போன்றோர் போற்றி வளர்த்ததும் தமிழே. நாமும் தமிழைக் கற்று மகிழ்வோம். தமிழ் வாழ்க, வளர்க என வாழ்த்தி நிற்போம்.

லோ. கிஷார்த்தன்
தரம் 6E
யா/இந்துக் கல்லூரி.

# உண்மை பேசி உத்தமனாய் வாழ்வோம்

கம்சிகா.க
தரம் -7
யா.வேம்படி மகளீர் கல்லூரி

ஒரு ஊரில் கந்தையா என்றொருவன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன், பொறுமைசாலி, புத்திசாலித்தனமாக இருந்தான். வாழ்க்கையில் பொய் பேசியதே இல்லை. அவன் மேல் அந்த ஊர்க்காரர் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். கந்தையாவை ஊர்த்தலைவராக நியமித்தனர். ஆனால் கந்தையாவிற்கு எதிரான செயல்களையுடைய சீலன் என்பவனும் அவ்வூரி லேயே வசித்து வந்தான். அவன் பல தீய பழக்கங்களைக் கொண்டிருந்தான். அவன் கந்தையாவை தன் எதிரியாகவே பார்த்தான். கந்தையா வெளியூர் செல்ல வேண்டி வந்தது. அதனால் கந்தையா ஊர் மக்களிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியூர் சென்றுவிட்டான். இதைத்தன் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்ட சீலன் கந்தையாவின் வீட்டினுள் தான் திருடிச் சேர்த்த காசுகளை ஒளித்து வைத்தான் அடுத்த நாள் கந்தையா திருடியதை தான் கண்டதாகவும் அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என கந்தையா மிரட்டி யதாகவும் கந்தையா மீது பொய்க் குற்றத்தினைச் சுமத்தினான்.

அதை மக்கள் நம்பவில்லை அதனால் அவன் கந்தையாவின் வீட்டை நோட்டமிட்டவாறு கூறினான். மக்கள் அனைவரும் பூட்டிக்கிடந்த கந்தையாவின் வீட்டுக்கதவை உடைத்தனர். சீலன் உள்ளே தான் வைத்து விட்டிருந்த பணத்தை எடுத்து வந்து மக்களுக்கு காட்டினான். மக்கள் அதை நம்பினர். அதனால் கந்தையாவை வெறுத்தனர். சீலனைத் தமது ஊர்ப்பெரியவராக நியமித்தனர். வெளியூரிலிருந்து வந்த கந்தையா நடந்தவற்றை அறிந்தார். சிறிதும் கலக்கம் இன்றி தனது வீட்டுக் கதவை மறுபடியும் செய்துவிட்டார். சீலன் பல இடங்களிலும் இருந்து மக்களுக்காக வரும் பணங்களை அபகரித்தான்.

ஒரு நாள் சீலன் கந்தையாவைக் கண்டு அவரைக் கேலி செய்வதற்காக தான் வைத்திருந்த பணத்தை கந்தையாவின் வீட்டிற்குள் வைத்ததிலிருந்து அனைத்தையும் கூறினான். அதை ஒரு பெரியவர் கேட்டு விட்டார். உடனே ஓடிச் சென்று ஊர் மக்களிடம் கூறினார். ஒரு நிமிடத்தில் அச்செய்தி அனைத்து இடங்களிலும் பரவியது. தாம் செய்த தவறை மக்கள் உணர்ந்தனர். சீலனை அடித்துத் துரத்தினர். சீலனும் தான் செய்த தவறை உணர்ந்து கந்தையாவிடம் மன்னிப்பு வேண்டினான். கந்தையாவும் அவனை மன்னித்துவிடும்படி மக்களிடம் கோரினான். மக்களும் அவனை மன்னித்து விடுவதாகக் கூறி, தம்முடைய ஊரில் மறுபடியும் ஊர்ப் பெரியவராக கந்தையாவை ஏற்றனர். சீலனும் கந்தையாவுக்கு உதவியாள னாக இருந்து மக்களுக்கு சேவை செய்து வந்தான்.

"நற்பண்பை வளர்த்து நாட்டில் நல்ல பிரஜைகளாக மாறுவோம்"

# வாசிப்போம் வளர்வோம்: வளர்ந்தும் வாசிப்போம்



நாம் சிறுவயதிலிருந்தே வாசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். ஏன் என்றால் மனிதனின் பிறப்புமுதல் இறப்பு வரை அவனுடன் வருவது கல்விதான். நாம் கல்வியைப் பெற வேண்டும் என்றால் சிறு வயதிலிருந்தே நல்ல நூல்களைத் தேடி வாசிக்கவேண்டும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஔவை வாக்கு. அதேபோல் நுலகம் இல்லா ஊரில் குடியிருந்து என்ன பயன்? ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஊரிலும் நூலகம் காணப்பட வேண்டும். அவ்வாறு நூலகம் இருந்தால் தான் அவ் ஊரோ கிராமமோ வாசிப்பில் வளர்ச்சி அடையும்.

வாசிப்பு இருந்தால் அவ் ஊரில் சண்டைகளோ சச்சரவுகளோ இல்லாமல் அக்கிராமம் வளர்ச்சி அடையும் என்பதில் ஐயம் இல்லை அல்லவா. பிறவிகளில் மனிதப்பிறவியே மேன்மையான பிறவியாகும். நாம் அப்பிறவியில் நல்ல நூல்களை வாசிக்க வேண்டும். வாசிப்பதன் மூலம் எம் ஆளுமை விருத்தியடையும். நல்லறிவு கிடைக்கின்றது. எனவே மாணவர்களாகிய நாங்கள் சிறுவயதில் இருந்தே " வாசிப்போம் வாசிப்போம் நூல்களை நேசிப்போம் என்றென்றும் வாசிப்போம்".

சு.சுஜிக்கா, தரம் 5.
யா.கோண்டாவில்
இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்.

## உலகம் என் கைகளில்

இயற்கையை அடக்கிவிடுவேன்
இமயங்களை நான் கடப்பேன்
விண்ணுக்கும் ஏணி வைத்து
நட்சத்திரப் பூப்பறிப்பேன்
முடிந்தால் வானவில்லை
உடுத்திக் கொள்வேன்
மேகங்களை மெத்தையாக்கி
என் படுக்கையறையில்
வைத்திடுவேன்
சூரியனை சிறைப்பிடிப்பேன்
வெண்ணிலவை காதலிப்பேன்
தென்றலுக்கு வேலி வைப்பேன்
இருளுக்கெல்லாம் தடைவிதிப்பேன்
கடலுக்கும் கட்டளையிடுவேன்
புல்வெளியில் நான் படுப்பேன்
பனித்துளியை போர்த்திக் கொள்வேன்
போர்க்களத்திலும் பூப்பறிப்பேன்
உலகம் என் கைகளில் என்றால்.

க. சசிக்கா, தரம் 9,
கொக்குவில் இந்துக்கல்லூரி

## இவையெல்லாம் எதற்கு

இரவும் பகலும் எதற்கு - மனம்
இன்பம் துன்பம் உணர
மேடு பள்ளம் எதற்கு - திறன்
மேன்மை தாழ்மை உணர
காயும் கனியும் எதற்கு - சொல்
கடுமை அன்பு உணர
பூவும் பிஞ்சும் எதற்கு - நாளும்
புதுமை இளமை உணர
பிறப்பும் இறப்பும் எதற்கு - உலகில்
ஆக்கம் அழிவு உணர
வரவு செலவு எதற்கு - உலகில்
நடுவு நிலமை உணர
மண்ணும் விண்ணும் எதற்கு - வாழ்வின்
மறுமை இம்மை உணர

உ- திருமகள்
யா. கோண்டாவில் இராம கிருஸ்ண
மகாவித்தியாலயம்.
தரம் 6 A

## ஆசிரிய தெய்வங்கள்

குற்றங்களைக் களைந்து குறைகள் எல்லாம் போக்கி
அற்புத மனிதராய் எம்மை அவனியில் செதுக்கின்ற
நற்றவப் பெரியோரே நமதருமைச் சிற்பிகளே
பெற்றவர் நிகரான பேரன்புப் பெருந்தகையீர்

எழுத்ததனை அறிவிக்கும் இறை சொரூப ஏந்தல்களே
பழுத்த உங்கள் புலமையினால் பாரினிலே நல்கும் பணி
முழு உலகும் போற்றுமே முப்பொழுதும் போற்றுவோம்
விழுப் பொருளை விதைத்தே வியனுலகில் சிறந்திடுவீர்

அன்புடனே அறிவுதனை அழகாய் கூட்டி
இன்பமுடன் ஊட்டி நிற்கும் எம தருமைப் பெரியோரை
அன்னை போல் அரவணைத்து ஆறுதலும் தந்தே
என்னாளும் எண்ண வைக்கும் எங்களது கண்கள்!

ஏணிபோல எமையுலகில் ஏற்றி நிற்பீர் நாளும்
வாணியவள் பாதம் பணிந்தே வாழ்த்துகின்றோம் வாழ்க
மூன்றாம் நற்குரவர்களாய் மதித்தும்மை நின்றோம்.
சான்றோரே ஜெகத்தினிலே செழுமை பெற்று வாழ்க!

கல்வி கலை ஒழுக்கமோடு விழுமியங்கள் சொல்லி
எல்லையிலா ஆற்றலுக்கு விளையாட்டும் புகட்டி
நல்லவராய் நாம் வாழ வழி காட்டும் பெரியோர்
எல்லையிலா அன்புடனே வாழ்த்துகின்றோம் வாழ்க!

உலகில் அருள் சுரந்தளிக்கும் இறைவனது பணியை
அவனியில் புரிந்து நிற்கும் ஆசான்கள் வாழ்க
உலகமெலாம் இத்தினத்தில் உங்களையே போற்றி
உவகை மிக நாங்களும் வாழ்த்துகின்றோம் வாழ்க.

கிஷாந்தி
தரம் -5A
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

## வாயார வாழ்த்துவோம்

எங்கும் மணக்கும் அன்புமலர்கள்
இனிய உறவால் பூத்து மகிழ
பொங்கும் இனிமை புன்னகை - சிந்தி
வாழ்ந்திட வேணும் பெறுமதியாக
உலகம் போற்றும் உயர்ந்தோர் வழியில்
அறிவைப்பெற்று சிறந்திட வேணும்
பல்கலை கற்று புவியில் உயர்ந்திட
என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்...

V.லக்சிகா, தரம் 6
யா. கொக்குவில் இந்துக்கல்லூரி




## நூலகம்

நூலகமாம் நூலகம்
நூல்கள் நிறைந்த நூலகம்
அறிவை வளர்க்கும் நூல்கள்
அதிகமுள்ள நூலகம்

சிறந்த நல்ல நூல்கள்
சிந்தனை வளர்க்கும் நூல்கள்
நல்வழி காட்டும் கதைகள்
நகைச்சுவை ஊட்டும் புதிர்கள்

எல்லாம் எங்கள் நூலகத்தில்
ஏராளம் ஏராளம் ஏராளம்
ஓடிப்போவோம் எம் நூலகம்
ஒரமாய் இருந்து படித்திடுவோம்

அன்பான நூலக ஆசிரியர்
அறிவுறுத்தலை நாம் ஏற்று
அமைதியாய் படித்திடுவோம்
பட்டம் பெற்று உயர்ந்திடுவோம்.

பயஸ்ராஜா யதிவர்ணன்
தரம் - 3
கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா
வித்தியாசாலை

## கற்றுக் கொள்

உண்மையாக இருக்கக் கற்றுக் கொள்
ஒழுக்கம் பேணப் பழகிக் கொள்!
அன்பை வளர்க்க அறிந்து கொள்
பண்பாய் வாழ உறுதி கொள் !

கடமையைச் செய்யக் கற்றுக் கொள்
கருணை உள்ளம் பேணிக் கொள் !
சேவை செய்யத் துணிந்து கொள்.
சேருமிடம் அறிந்து சேர்ந்துகொள் !

கல்வி பெரிதெனக் கவனம் கொள்
காலத்தே கற்றுத் தேர்ந்து கொள் !
படிப்பு இல்லையேல் மதிப்பு இல்லை
மதிப்பு இல்லையேல் மானுடம் இல்லை.

உழைப்பே பெரிதென உணர்ந்து கொள்
உயர்வு அதுவென தெரிந்து கொள்!
பகைமை என்றும் கொள்ளாதே
பழிச்சொல் பெற்று வாழாதே!

க. கிசோலினி தரம் 4E
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

## முத்தந்தா

கண்ணே மணியே முத்தந்தா - நீ
கரும்பிலும் இனிய முத்தந்தா
பொய்மை ஒழிந்திட முத்தந்தா - நீ
மெய்மை வளர்ந்திட முத்தந்தா

மதிமுகம் சிவக்க முத்தந்தா - நீ
மலராய் மலர்ந்திட முத்தந்தா
சிரிக்கும் சிலையே முத்தந்தா - நீ
சிட்டுக்குருவி போல் முத்தந்தா

ஆசை அமுதே முத்தந்தா - நீ
ஆல் போல் வாழ முத்தந்தா
உளம் ஒளிபெற முத்தந்தா - நீ
உயிராய் தாய்க்கு முத்தந்தா.



த. கௌஸ்துபன்.8D
கொக்குவில் இந்துக்கல்லூரி

## அறிவுக்கோயில்

நூலகம் நல்ல நூலகம்
நூல்கள் நிறைந்த நூலகம்

காற்றோட்டம் உள்ள நூலகம்
கதைகள் சொல்லும் நூலகம்

அமைதி பேணும் நூலகம்
அறிவுக் கண்ணைத் திறக்கும் நூலகம்

உயிரைப் போன்ற நூலகம்
உயிரெழுத்தைச் சொல்லும் நூலகம்

உள்ளம் நிறைந்த நூலகம்
உளவிருத்தி தரும் நூலகம்

நூலகம் என்றால் தனி உலகம்
நுழைந்தால் புதுப்புது அனுபவங்கள்

தரம் 04
இ.ஜஸ்வின
யா/கொக்குவில் ஸ்ரீ இராம கிருஸ்ண
வித்தியாசாலை

## தாய்மையைப் போற்றுவோம்



வி.சிலக்சிகா, தரம் 8G
கொக்குவில் இந்துக்கல்லூரி

அம்மா என்பது தமிழ் வார்த்தை. அதுவே குழந்தையின் முதல் வார்த்தை அன்பைப் பொழிவதும் அம்மா. அருளைப் பொழிவதும் அம்மா. இரவு பகலாய் விழித்து இன்னல் தனைப்போக்கி, இரையதனை வழங்க இன்னல்படுவதும் அம்மா. பத்து மாதம் சுமந்து, பாதுகாத்து வழிநடத்தி பண்பாடுதனை ஊட்டி பாதுகாப்பது அம்மா. தாய்மை என்பது உலகத்து உயிரினங்கள் யாவர்க்கும் பொதுவான சிறப்பு. மனிதத் தாய்மையிலும் பார்க்க விலங்குகள், பறவைகள் காட்டும் தாய்மைப்பாசம் அதீதமானது. நான் அடுத்த வீட்டுக் கூரையில் காகத்துக்கு சோறுவைப்பேன். சோறு வைத்தால் காகம் வந்து சோற்றைக்கிளறும். தன் குஞ்சுக்கு ஏற்று தானா என்று பார்க்கும் பின்னர் அச்சோற்றை அலகால் அள்ளி வாய்க்குள் திணிக்கும் போது எனக்கு மெய்சிலிர்க்கும். அறிவில் குறைந்த அந்த காக்கையின் தாய்ப்பாசம் இயற்கையின் சிறப்பு. அதற்காக ஆறறிவுத் தாய்ப்பாசம் குறைவானதால் போற்றுதற்குரியதுதான்.

தற்போது எத்தனையோ குழந்தைகள் தாய், தந்தையின்றி தவிக்கின்றார்கள். எங்கள் நாட்டில் பிறர் பிள்ளை தலைதடவ தன் பிள்ளை தானே வளரும் என்று முன்னோர் வாக்குக்கிணங்க அந்த அநாதை குழந்தைகளுக்கு தாயாக மாறி நாம் பாசம் காட்ட வேண்டும். அநாதைகளுக்கும் அன்னையாக வாழ்ந்தால் நம் தாய்மைக்கு பெருமை. மற்றைய ஜீவராசிகளின் தாய்மையிலும் பார்க்க மேம்பட்டதாகவும் தெரியும். எனவே தாயற்றவர்களுக்கு தாயாக வாழ்ந்து தாய்மைக்குப் பெருமை சேர்ப்போம்.

| கண்டு பிடிப்புக்கள் | | விஞ்ஞானிகளின் பெயர்கள் |
|---|---|---|
| 1. | குளிர்சாதனப்பெட்டி | ஜேம்ஸ் காரிஸன் |
| 2. | பேனா குமிழ்முனை | லூயிஸ் வாட்டார் மேன் |
| 3. | சைக்கிள் | கிரிக் பாற்றிக் மக்மிலன் |
| 4. | தீப்பெட்டி | ஜோன்பாக்கர் |
| 5. | கையடக்க தொலைபேசி | D.J. பிராண்டன் பெர்க்கார் |
| 6. | பலூன் | ஹரர்த்தஸ் யாக்பஸ் யோசப் |
| 7. | பேனா | லூயிஸ் வாட்டர் மேன் |
| 8. | தொலைக்காட்சி | மின்பிடி ப்ரான்ஸ்வொர்த் |
| 9. | கைக்கடிகாரம் | பார்த்லோமோ மான்மீ:.கி |
| 10. | மோட்டார் சைக்கிள் | G. டெய்ம்லர் |

எஸ். ஜனார்த்தனன் தரம் 5
கொக்குவில் இந்துக்கல்லூரி.

### மொட்டுக்களின் மொழிகள்

# குழந்தைப் பருவம் எதுவுமறியாதது

குழந்தைக்கு முதன்முதலில் தாயும் தந்தையும் சூழவுள்ளவைகளுமே அதன் உருவாக்கத்தின் முதன்மைக் காரணிகளாகின்றன. ஆகவே ஒரு குழந்தையின் வளர்ப்புச் சூழலே அக்குழந்தையை வடிவமைக்கின்றது.

தாயின் அரவணைப்பில் தாய்ப்பாலைச் சுவைத்த குழந்தை பின் புட்டிப்பாலுக்கும் தாய் கொடுக்கின்ற உணவுகளுக்கும் பழக்கப்படுகிறது. தாயானவர் தனது குடும்ப பொருளாதார மற்றும் பழக்க வழக்கங்களுக் கேற்பவே தன் குழந்தையையும் வளர்த்தெடுக்க முயல்கிறாள். ஆகவே ஒரு தாய் தன் குழந்தையின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு எத்தகைய உணவுகளை வழங்க வேண்டும் என்பதை முதலில் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். அதேஅளவு வளர்ச்சியில் கவனம் கொள்ளுவதுடன் குழந்தையின் அறிவை வளர்ப்பதற்குச் சிறுவயதில் எத்தகைய நடவடிக் கைகளை எடுக்கவேண்டும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

காரணம் குடும்ப சூழல் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்போதே ஒரு குழந்தையின் மனம், உணர்வு - புற விடயங்களைக் கிரகிக்கத் தொடங்கும். வீடு சுத்தமாகவும் அழகாகவும் இருக்கும் போது அவை குழந்தையின் மனதில் பதியத் தொடங்கும். இவ்வாறு வளரும் குழந்தை நல்ல சூழலையே தான் விளையாடவும் தன்னுடன் விளையாடு பவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் கற்றுக் கொள்ளும்.

அடுத்து அப்பிள்ளையின் புத்தியை மேம்படுத் தக்கூடிய அறிவூட்டக்கூடிய நல்ல கதைகளைச் சாப்பிடும்போதும் தூங்கும் போதும் கூறிவரும் போது அதனது மூளையில் அத்தகைய அறம் சார்ந்த விடயங்கள் அதனை அறியாமலேயே பதியத் தொடங்கும். உண்மை, நேர்மை, மென்மை பிறருக்கு உதவி செய்தல் முதலிய நல்ல விழுமியங்களுடன் பிள்ளை வளரும்போது பாடசாலைக்குச் செல்லும் பருவத்தில் அது சுயமாகச் சிந்தித்து தனக்குரிய நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

நாம் நல்ல உணவுடன் சேர்த்து நல்ல கருத்துக்களை ஊட்டி வளர்க்கும் போது "ரியூசன்" நிலையங்கள் தாமாகவே செயலிழக்கும். பிள்ளை களை வற்புறுத்தி இழுத் துச் சென்று சுதந்திரம் இல்லாமல் விளையாட்டு நேரத்தையும் பறித்து ரியூசனில்" இருத்துவதால்! சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளையே நாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

இந் நிலைமை எதிர்காலத்தில் ஒரு குறித்த சூழலில் சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்க இயலாத ஒரு சத்துமற்ற சமுதாயமே நம் கண்முன் உள்ளது. பெற்றொரும் பிள்ளைகளும் நூல்களை வாசிப்பதன் மூலமே உருவாக முடியும்.

ரியூசன் நிலையங்களுக்கு ஓடி ஓடிப் பணத்தையும் நேரத்தையும் வீணாக்கி அறிவைத் திணிக்க முடியாது. நாளாந்தம் வாசிப்பதன் மூலம் சிறுகச் சிறுகச் சேமிக்கும் அறிவே ஆயுள் உள்ளவரை நிலைத்து நின்று பயன்தரக் கூடியது.

ஆகவே பெற்றோர்கள் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் நல்ல நூல்களைத்தெரிவு செய்து படிக்கும்போது: கூட இருக்கும் குழந்தையும் அதனைப் பார்த்துக் கற்றுக் கொள்கிறது. தானும் நூல்களை எடுத்துப் படிக்க ஆரம்பிக்கும். அதை விடுத்து அதனை மட்டும் படிக்கச் சொல்வதோ வற்புறுத்துவதோ அதற்கு வெறுப்பையே ஏற்படுத்தும்.

கிழமையில் ஓரிரு நாளாவது நூலகத் துக்கு அழைத்துச் சென்று ராக்கைகளில் உள்ள நூல்களைத் தேடி எடுத்துப்படிக்கப் பழக்கும் போது நூலகமும் வாசிப்பும் அவர்களுக்கு ஒரு பழக்கமாக்கி: கோயில் முதலிய வெளியிடங் களுக்குச் செல்வதுபோல நூலகத்துக்குச் செல்லும் பழக்கத்தையும் அவர்கள் வாழ்வில் பின்பற்றுவர்.

இன்று ஆசிரியர் உட்பட அனைத்துத் தரப்பினரும் பெற்றுள்ள பட்டங்கள் அளவி லடங்காதவை. அவற்றால் என்ன பயன்? பட்டங்கள் அவர்களுக்கு வீண் கர்வத்தையும் அகம்பாவத்தையுமே ஏற்படுத்தியுள்ளன. வரட்டுக் கௌரவத்தால் சூழலைப் புரிந்து நடக்காமல் அவமதிப்பும் அக்கறையின் மையுமே சமூகத்தில் நிறைந்து காணப் படுகின்றது.

ஒரு காலத்தில் ஆசிரியத் தொழிலின் மகத்துவம் அவர்கள் கடவுளாகப் போற்றப்பட்ட காலம் திரும்பவும் வரவேண்டுமானால் கல்வியும் விழுமியங்களும் இணைந்து உருவாக்கப்பட்ட சமுதாயத்தால் மட்டுமே சாத்தியமாகும். தகவல் சமூகம் என்று கூறப்படும். இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் (நாமும்) அக்கறையுடன் பரீட்சைக்காக மட்டுமலல்லாமல் இணைந்து செயற்படும் போது மதிப்புடன் நிமிர முடியும்.

"வாருங்கள் வாசிப்போம்"

விமலா வேல்தாஸ்
நூலகர்
சமகாலக் கலை - கட்டடக் கலை
மற்றும் வடிவமைப்புக்கான
இலங்கை ஆவணக்காப்பகம்.
199, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

# சிறு சேமிப்பு

நம் வருவாயின் சிறுபகுதியை சிறுகச் சிறுக சேமிக்கும் பழக்கமே சிறுசேமிப்பு எனப்படும். சிறுதுளி பெரு வெள்ளம் என்ற பழமொழி போல் நாம் இவ்வாறு சேமிக்கும் பொருளானது பின்நாளில் நமக்கு மிகுந்த பயனைத்தரும் என்றால் அது மிகையாகாது. சேமிப்பு என்பது சிக்கனத்தின் குழந்தை என்று கூறலாம். பெரியவர்கள் மட்டுமன்றி மாணவர்களும் சேமிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

எறும்பு மழைக் காலத்திற்கான உணவை கோடை காலத்திலேயே சேமித்து வைத்து இருக்கிறது. பின்நாளில் அவதிப்படுவதிலிருந்து அச்சேமிப்பு அதனைக் காப்பாற்றுகிறது. அதேபோல் மனிதர்களாகிய நாமும் வருவாயிலிருந்து ஒரு பகுதியை சேமிக்க வேண்டும்.

வேகமும் போட்டியும் நிறைந்த இவ்வுலகில் பொருளின் தேவை யாவர்க்கும் உள்ளதே. அணைக்கட்டில் சேமித்த நதிநீர் விவசாயிகளுக்கு பயன்படுவது போல் நாம் சேமித்த பொருளானது உரிய காலத்தில் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

வருவாய் இல்லாத நேரத்தில், அத்தியாவசியச் செலவுகள் ஏற்படும் காலத்தில், திடீரென்று மருத்துவச் செலவுகள் உண்டாகும் காலத்தில் எல்லாம் நாம் சிறு சேமிப்பின் மூலம் சேமித்த பொருளே பயன்படும்.

சிறு சேமிப்பு பழக்கத்தினால் சிக்கனம் வளர்கிறது. பணம் வீணாகச் செலவாகாமல் வட்டியோடு பெருகுகிறது. எதிர்பாராத செலவுகளுக்கு கை கொடுக்கிறது. கையில் பொருள் உள்ளவர்க்கே சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது என்பதை மனதில் வைத்துக்கொண்டு சேகரிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



S.Seenuvasa
Grad - 6C
J/ Hindu College



# யார் அழகு?

ஓரிடத்தில் எலி, முயல், குரங்கு, கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகிவந்தன. ஆனாலும் அவைக்குள் அழகு பற்றி அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பற்றிப் பறை சாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் அமைதியாக இருக்கும். நாம் நால்வரில் நான்தான் மிக அழகு ! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்து தான் தோன்றியதாகச் சொல்வார்கள். பெருமையாகச் சொல்லியது குரங்கு. நாங்கள் மனிதர்கள் வீட்டுக்குள்ளேயே மறைந்து வாழ்கின்றோம். எங்களிடம் அழகும் அறிவும் உள்ளது. நான்தான் அழகு தேவதை என்றது எலி. மனிதர்கள் திட்டும்போது எலிமுகம், குரங்குமுகம் என்று திட்டுவார்கள். ஆனால் அழகானவர்களைப் பார்த்து கிளி போல என்று கூறுவார்கள். எனவே நான்தான் உண்மையான அழகு என்றது கிளி.

நான் இந்த அழகு ராணிப் போட்டிக்கு வரவில்லை என்று முயல் சொல்ல ஏனைய மூன்றும் சிரித்தன. முயல் மெல்ல அவ்விடத்தைவிட்டு அகன்றது. என்ன இருந்தாலும் வெள்ளை வெளீரென முயல் ஓடி வரும் அழகே தனிதான் என்று குரங்கு கூறியது. "ஆம்" ஒப்புக் கொண்டது கிளி. நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு , புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்போழுது தான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும் என்றது எலி. எனக்கொரு யோசனை தோன்றுகின்றது. எமக்குள் ஓர் அழகுராணிப்போட்டி வைத்தால் என்ன? என்றது கிளி. போட்டி நடத்தலாம். ஆனால் யார் நடுவர்? கேள்வி எழுப்பியது எலி.

"நடுவராக நான் இருக்கிகிறேன்" திடீரென ஒரு சத்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க ஒரு காகம் மரத்தில் இருந்தது. நீங்கள் எப்படி? ஆச்சரியப்பட்டது குரங்கு. நீங்கள் மூவரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் அழகு ராணியாகத் தெரிவு செய்பவரை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். காகம் தன் நிபந்தனையைக் கூறியது. அப்படியே செய்கின்றோம். அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன. மறுநாள் அனைத்தும் அழகு ராணிக் கனவில் மிதந்த படி காகத்தைத் தேடிப் போய்க் கொண்டிருந்தன. அப்போது ஒரு குருவி வலியால் துடித்துக்கொண்டிருந்தது. அதன் காலில் காயம்பட்டிருப்பது தெரிந்தது. "எனக்கு யாராவது உதவி செய்யுங்களேன் எனக்கு ஒரு சிறுவன் கல்லால் எறிந்து விட்டான்" என மன்றாடியது குருவி.

"நாங்கள் அழகுராணிப் போட்டிக்குப் போய்க்கொண்டிருக்கின்றோம். அபசகுனம் பேசாதே" கடுமையாகக் கூறியது குரங்கு. குருவியைப் பார்த்த எலியும் கிளியும் முகம் திருப்பிச் சென்று விட்டன. முயல் மட்டும் குருவி அருகில் சென்று அவசரஅவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்துக் கட்டிவிட்டு அழகிப் போட்டிக்குச் சென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்குள் முயல் மட்டும் செல்லவில்லை. மிகுதி மூன்றும் மனதிற்குள் மகிழத் தொடங்கின.

"அழகிற்கும் அறிவிற்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண் கொடுப்பேன். இதற்குத்தான் அதிக மதிப்பெண் ஒதுக்கியிருக்கின்றேன்" காகம் கூறியது. குருவிக்கு உதவாதமூன்றும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது அரக்கப்பறக்க முயல் ஓடி வந்தது. முயல்தான் அழகுராணி. முயலை அழகுராணியாகத் தெரிவு செய்வதற்கு நான் பெருமைப்படுகின்றேன். குருவி எனது நண்பன் தான் ! தன்னை ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன் தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது குறித்துக் கூறி வருத்தப்பட்டது. "உதவும் நல்ல மனம் உள்ளவர்கள் தான் உண்மையில் அழகானவர்கள்" காகம் கூறியதும். மற்றையவை அமைதியாக நின்றன.



ஜெ. ஜரனிகா
தரம் - 2A
யா. கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

நீங்களும் வரையல

## சிறுவர் கைவண்




பு. கனிசா 4B
யா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



லோ.கிசாந்தன் 6E
யா. இந்துக் கல்லூரி




ஆதிதியன்
கிட்ஸ் பாக் முன்பள்ளி




பா.பிருதிவ்
பாலர் பாடசாலை




சு.ஜெனார்த்தனன் 5B
யா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை




க. சதுர்த்திகன் 3D
யா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



ஜெயமாறன் 5G
யா. கொக்குவில் இந்து ஆரம்ப



லி.வனுஜா 3D
யா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



லக்சன் 2A
யா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை




இ. நிமல், 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## களும் வரையலாம்
# ர் கைவண்ணகள்



பா.பிருதிவ்
பாலர் பாடசாலை



லக்சிகா 6D
கொக்குவில் இந்துக்கல்லூரி



கிசாங்கி 5A
யா. கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



திவ்யன் 2A
யா. புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



ஜெயமாறன் 5G
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை



ராகுலன் 3C
யா. புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



கிசாங்கி 5A



மல், 8
இந்துக் கல்லூரி





அ. பிரக்ஷனா
யா. யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை



# என் அம்மா

1. எனது அம்மாவின் பெயர் க. தேவராணி
2. அவர் என்மீது அன்பு உள்ளவர்.
3. அம்மா சுவையான உணவு சமைத்துத் தருவார்.
4. அவர் மிகவும் அழகானவர்.
5. அம்மா எனக்கு பாடம் சொல்லித் தருவார்.

தரம் - 01
க. கிருசிகன்
யா/கொக்குவில் ஸ்ரீ
இராமகிருஷ்ண வித்தியாலயம்

# விண்வெளிக்குச் சென்ற முதல் விலங்குகள்

S.Seenuvasan
Grade - 6C
J/Hindu College

| விலங்கின் பெயர் | அனுப்பிய நாடு | திகதி |
|---|---|---|
| லைக்கா (நாய்) | சோவியத்ரஷ்யா | 03.11.1957 |
| வாஸ்காபென்ஜி (எலி) | அமெரிக்கா | 13.12.1958 |
| ஆபின்பேக்கர் (குரங்கு) | அமெரிக்கா | 28.05.1959 |
| உடவாய் நயா (முயல்) | சோவியத்ரஷ்யா | |
| சாம்ஆன்ரிஸஸ் (குரங்கு) | அமெரிக்கா | 04.12.1959 |
| த்தீஸ் (நாய்) | சோவியத்ரஷ்யா | 19.12.1960 |
| மிஸ்ஸாம் பென்ரீஸஸ் | அமெரிக்கா | 21.15.1960 |

# நூல்களும் நூலாசிரியர்களும்

| | |
|---|---|
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| பெரியபுராணம் | - சேக்கிழார் |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| திருவாசகம் | - மாணிக்கவாசகர் |
| இராமாயணம் | - வால்மீகி |
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| மணிமேகலை | - சீத்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | - திருத்தக்கதேவர் |
| நன்னூல் | - பவணந்திமுனிவர் |
| தேம்பாவணி | - வீரமாமுனிவர் |
| கலிங்கத்துப்பரணி | - சயங்கொண்டார் |
| திருமந்திரம் | - திருமூலர் |
| நல்வழி | - ஔவையார் |

S. சீனுவாசன்
தரம் - 6c
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# எழுத்தறிவு அவசியம்

மானிடர்களாகிய எங்களுக்கு எழுத்தறிவு அவசியம்.

எழுத்தறிவைத் தந்த ஆசான் இறைவனுக்கு சமமானவர்.

தற்காலத்தில் சிறுவர்களில் இருந்து முதியோர்வரை எழுத்தறிவு உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

யுனெஸ்கோ நிறுவனம் 1965 ஆம் ஆண்டில் எழுத்தறிவு தினத்தினை பிரகடனம் செய்துள்ளது.

எழுத்தறிவு தினம் யுனெஸ்கோ நிறுவனத்திலும், நூலகங்களிலும், பாடசாலைகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

சி. லக்சன் தரம் 2.
யா.கொ. இந்து ஆரம்பப் பாடசாலை.

## ஒரு நிமிடத்தில் பல அற்புதங்கள் அவற்றில் சில

1. ஒரு நிமிடத்தில் வானிலிருந்து 600 விண்கற்கள் விழுகின்றன.
2. ஒரு நிமிடத்தில் பூமி 950 மைல் சுற்றுகிறது.
3. ஒரு நிமிடத்தில் 144 பேர் பிறக்கின்றனர்.
4. ஒரு நிமிடத்தில் 34 திருமணங்கள் நிகழ்கின்றன.
5. ஒரு நிமிடத்தில் 10 விவாகரத்துக்கள் நடக்கின்றன.
6. ஒரு நிமிடத்தில் 6,38,000 பேர் மது அருந்துகிறார்கள்.

S. சீனுவாசன் தரம் - 6c
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# நூலகம்


1.நூலகம் என்பது ஒரு தேன் கூட்டைப் போன்றது.
2. மாணவர்களாகிய நாம் தேனீக்கள் போன்றவர்கள்.
3. எனவே மாணவர்களாகிய நாம் தேன்கூட்டை நாடிச்சென்று பருக வேண்டும்.
4. நூலகத்திலே அமைதியான முறையில் இருந்து எமக்குத் தேவையான புத்தகங்களை எடுத்து வாசிக்க வேண்டும்.
5. தேவையான நல்ல விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.
6. நல்ல நூல்கள் ஒவ்வொன்றும் நல்ல நண்பனைப் போன்றவை.
7. எனவே எமக்கு ஓய்வான நேரத்தில் நூலகம் சென்று நூலகப் பொறுப்பாளரின் அனுமதியுடன் பயன்தரு நூல்களைப் பெற்றுச்சென்று வாசிப்பது மிகச் சிறந்தது.
8. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற வாக்கியத்திற்கு இணங்க நல்ல நூலங்களைத் தேடிக் கற்க வேண்டும்.
9. நூலகத்தில் அமைதியும், புனிதமும் பேணி மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்வது மாணவர்களது கடமையாகும்.
10. சிறுவர்களாகிய எமக்குத் தேவையான அறிவுக் கதைகள் போன்ற நூல்களை எடுத்து வாசித்த பின் மீண்டும் உரிய இடத்தில் வைத்து விடுவது எமது கடமையாகும்.

நாகேந்திரன் கலைநிலவன்
தரம் - 05
யா. கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

# பழமொழிகள்

ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது.
காகந்திட்டி மாடு சாகாது.
கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
சிறுதுரும்பும் பல் குத்த உதவும்.
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.
காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.
தவளையும் தன்வாயால் கெடும்.

J. ஆர்த்தி
தரம் - 4
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை




# கடிஜோக்ஸ்

1. 11 அறிவுள்ள விலங்கு - மனிதக்குரங்கு (6 + 5)
2. புகையைக் கக்கும் பிராணி - சாம்பிராணி
3. மழையில் நனையாத காய் - குடைமிளகாய்
4. தானத்தில் பெரிய தானம் - மைதானம்
5. உலகிற்கு அதிர்ச்சி தரும் City - Electricity
5. காசைப் போட முடியாத Bank - Blood Bank
6. உழவன் வாங்க விரும்பும் பை - கலப்பை
7. ரயில் நிற்காத Station - Police Station

S. சீனுவாசன்
தரம் - 6
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# My Hobby



Every person must have some hobbies or other to spend his free - time.All the children have very different hobbies. Gardening, Painting, Stamp - collecting, Playing, Reading story books and watching T.V are some hobbies, and my hobby is stamp - collecting.

Stamp - collecting is a very interesting, useful and not an expensive hobby. We can learn a lot main reason why like this hobby very much. There fore by collecting stamps of different countries. We learn all about their people.

I have two big Albums full of stamps. I have many friends. I exchange stamps with them I shall have stamps of every country in this world. I'm very proud of my collecting and I love my hobby very much.

T. Kajuury
Grade - 5
J/Jaffna Hindu Primary School.

## பிராணிகள் சிலவற்றின் சராசரி ஆயுட்காலம்

| | | |
|---|---|---|
| வரிக்குதிரை | - | 22 ஆண்டுகள் |
| அணில் | - | 09 ஆண்டுகள் |
| செம்மறியாடு | - | 16 ஆண்டுகள் |
| பெருங்காரம் | - | 20 ஆண்டுகள் |
| தீக்கோழி | - | 50 ஆண்டுகள் |
| பென்குயின் | - | 35 ஆண்டுகள் |
| சிட்டுக்குருவி | - | 02 ஆண்டுகள் |
| சுறாமீன் | - | 20 ஆண்டுகள் |
| விலாங்குமீன் | - | 11 ஆண்டுகள் |
| பொன்மீன் | - | 25 ஆண்டுகள் |
| கடற்சிங்கம் | - | 06 ஆண்டுகள் |
| திமிங்கிலம் | - | 500 ஆண்டுகள் |

S. Janarthanan
Grade - 5B
J/Kokuvil Hindu College.

## கண்டு பிடிப்பாளர்கள்

1. மைக்ரேஸ்கோப் - ஜன்சின்
2. தீப்பெட்டி - ஜோன் வோக்கர்
3. வரைபடம் cmapc - சுமேரியர்
4. திசைகாட்டி - இல்மர் ஸ்லெரி
5. கணினி - எவன் - எம் டியுரின்
6. சீமேந்து - ஜோசப் எஸ்ப்டின்
7. சலவை இயந்திரம் - ஹர்லி பெசின்
8. அச்சுயந்திரம் - ஜே. குடன்பர்க்
9. கடதாசி - சீனர்

த. கேதகி, தரம் 3.
யா. இந்து ஆரம்பப் பாடசாலை

## பொது அறிவு

1. தங்கம் அதிகளவில் உள்ள நாடு தென்னாபிரிக்கா.
2. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு நோர்வே.
3. உலகப் புகழ்பெற்ற ஓவியர் பிக்காசோ.
4. குளிர்சாதனப் பெட்டியில் உள்ள வாயு அமோனியம் ஆகும்.
5. கிரிக்கட் மட்டை வில்லோ மரத்திலிருந்து உருவாக்கப்படுகின்றது.
6. முக்கனிகள் மா, பலா, வாழை போன்று மும்மலர்கள் பனம்பூ, அத்திப்பூ, வேப்பம்பூ
7. மின்மினிப்பூச்சி ஆண் ஆகும். இதன் புழு வடிவமே பெண் ஆகும்.
8. எட்டு ஐஸ்வரியங்கள் ஆவன அரசு, மக்கள், சுற்றம், பொன், மணி, நெல்வாகனம், அடிமை.
9. இந்திய நேரம் காட்டும் கடிகாரத்தை தலைகீழாகப் பார்த்தால் கறீனிச் நேரம் தெரியும்.
10. ஔவையார் பாடிய நூல்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, விநாயகர் அகவல், அருந்தமிழ் மாலைஆகியன ஆகும்.


எஸ். ஜனார்த்தனன்
தரம் 5B
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## கூடாத கூட்டங்கள் கூடுவான் ஏன்?

ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவர் தனது மாடி வீட்டிலே நாய் ஒன்றை வளர்த்து வந்தார். அந்த நாய் இரவு வேளைகளில் ஊரின் எல்லையில் உள்ள குளக்கரைக்குச் சென்று வரும் வேளையில் காட்டு நரி ஒன்றை நண்பனாக்கிக் கொண்டது. ஒருநாள் நரி தன் நண்பனுக்கு காட்டிலுள்ள உணவுகளை வழங்கி மகிழ்ந்தது. இதற்கு நன்றிக்கடனாக நாயும் தன் நண்பனான நரியை இரவு வேளையில் தனது வீட்டிற்கு அழைத்து தனக்கு வழங்கிய உணவை வழங்கி வீட்டைச்சுற்றிக் காண்பித்ததோடு மாடி வீட்டிலும் ஏறி சுற்றி உலாவந்தன.



நரிக்கு அதிகூடிய சந்தோஷம் ஏற்பட்டதால் செய்வதறியாது உரத்து "ஊ........ ஊ....." என ஊளையிட்டது. இச்சத்தத்தை கேட்ட எஜமான் விழித்தெழுந்து காட்டு நரி வீட்டிற்குள் வந்து விட்டதே ! என்று நரியை அடித்துக் கொன்று ஊரெல்லையில் உள்ள குளத்தடியில் வீசி எறிந்தார். இரவு வேளையில் அவ்விடத்திற்கு வந்த ஏனைய நரிகள் தமது நண்பனின் இறப்பைக் கண்டு தங்கள் நீதி மன்றத்தில் பலதரப்பிலும் பற்பல விடயங்களை முன்வைத்து ஆராய்ந்து,



கூடாத கூட்டங்கள் கூடுவான் ஏன்?
கூடாத கூட்டங்கள் கூடினாலும்
கூடங்கள் மாடங்கள் ஏறுவான் ஏன்?
கூடங்கள் மாடங்கள் ஏறினாலும்
ராகங்கள் கீதங்கள் பாடுவான் ஏன்?
நாசங்கள் மோசங்கள் வந்ததப்பா !"
எனத் தீர்ப்பு வழங்கின.

எனவே நாங்களும் கூடாத கூட்டங்களை விடுத்து எம்மைப் போன்ற நல்ல பண்புள்ளவர்களை நண்பராக்கி நற்பிரஜைகளாக வாழ்வோமாக.

கமலேஸ்வரசர்மா சுவேதிகா
தரம் - 3D
யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.

## ஆரம்ப விஞ்ஞானம் - மருத்துவம்

மனித உடலின் சராசரி வெப்பநிலை

- 98.4° c, 36.8° c

மனிதர்களின் சராசரி நாடித்துடிப்பு நிமிடத்திற்கு

- 72 தடவை

மனித உடலின் மிகப் பெரிய சுரப்பி

- ஈரல்

மனித உடலின் மிகப் பெரிய அங்கம்

- தோல்

மனித உடலி மிகவும் பெரிய உறுப்பு

- கல்லீரல்

மனித உடலின் மிகவும் வன்மையான பகுதி

- பல்மிளிரி

குருதியின் வகைகள்

- A,B,AB,O

மருத்துவத்தின் தந்தை

- கிப்போகிரட்டிஸ்

மின்குமிழில் உள்ள ஒளிரும் இழை ஆக்கப்படும் லோகம்

- தங்குதன்

ஒலி ஒளி இரண்டிலும் வேகம் கூடியது

- ஒளி

வெப்ப காலத்தில் மணற்தரையில் சூரிய ஒளி முறிவடைதல் நீர்நிலை போன்று தோன்றுவது

- கானல் நீர்

உலகின் முதலாவது பெண்தாதி

- புளோரன்ஸ் நைற்றிங்கேள்

முதலாவது சோதனைக் குழாய் குழந்தை

- (இங்கிலாந்தில் பிறந்தது) லூஸிபிரவுன்

மனித உடலில் உள்ள எலும்புகள்

- 207

மனித உடலில் முதலில் இறக்கும் பகுதி

- மூளையின் கலங்கள்

மனித உடலில் சுத்தமான இரத்தத்தைக் கொண்டு செல்லும் குழாய்கள்

நாடிகள்

அசுத்தமாதன இரத்தத்தை கொண்டு செல்லும் குழாய்கள் நாளங்கள்

**விஞ்ஞானம்**

சுற்றாடலில் உள்ள வாயுக்கள்

- காபனீர்ரொட்சைட், ஒட்சிசன், நைதரசன்

இலங்கையில் 103 ஆறுகள் உண்டு.

| | |
|---|---|
| இருளை நாடும் விலங்கு | - நத்தை |
| நத்தை முட்டையின் நிறம் | - மஞ்சள் |
| பின்னோக்கி பறக்கக்கூடிய பறவை | - ஹம்மிங்பேட் |
| குறைந்த நேரம் மலரும் பூ | - பார்லி |
| தவளை முட்டையின் நிறம் | - கறுப்பு |
| கரப்பான் பூச்சியின் இரத்த நிறம் | - வெள்ளை |
| மிக உயரமான பற்கள் கொண்ட பறவை | - ஆர்டிக் டெர்ன் |

கம்சிகா, தரம் - 7
யா. வேம்படி மகளீர் கல்லூரி

## தொகைச் சொற்களை விரித்தெழுதுதல்

முத்தமிழ் :
இயற்தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்
முக்கனி :
மா, பலா, வாழை
ஐவகை நிலம் :
குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்
இருவினை :
நல்லவினை, தீவினை
இருதிணை :
உயர்திணை, அகிர்திணை
ஐம்பால் :
ஆண்பால், பெண்பால், பலர்பால், பலவின்பால், ஒன்றன்பால்.
நாற்படை :
யானைபடை, குதிரைப்படை, தேர்ப்படை, காலால்படை
நான்மறை :
இருக்கு, யதுர், யாமம், அதர்வணம்
பஞ்சபாண்டவர் :
தருமன், பீமன், அருச்சுணன், நகுலன், சகாதேவன்
ஐம்பெரும் காப்பியங்கள் :
மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், குண்டலகேசி, வளையாபதி
ஐந்திலக்கணம் :
எழுத்து, சொல், அணி, யாப்பு, பொருள்
நாற்றிசை :
வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு
மூவேந்தர் :
சேரர், சோழர், பாண்டியர்
ஐம்பூதங்கள் :
நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ
ஐம்பொறி :
மெய், வாய், கண், மூக்கு, செவி

த.ரத்னாங்கி, தரம் 8E
கொக்குவில் இந்துக்கல்லூரி

## இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள்

புலமைப்பரிசில் திட்டம் - 1952
இலவசக்கல்வி - 1945
சுய மொழிகள் போதனை மொழியாக்கப்பட்டமை -1956
பாடசாலை தேசிய மயப்பட்டமை - 1966
விஸ்கோத்து நிகழ்ச்சித் திட்டம் - 1968
மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் -1986
இலவச பாடநூல் - 1980
தேசிய கல்வி நிறுவகம் - 1985
தேசிய பாடசாலை உருவாக்கம் - 1987
இலவச மதிய உணவு - 1989
இலவச சீருடை விநியோகம் - 1993
பாடசாலை மட்டக் கணிப்பீடு - 1999

கோர்டன் வெயீஸ், தரம் 8
யா. கொக்குவில் இந்துக் கல்லூரி


## வண்ணாத்துப்பூச்சிகள்




வண்ண நிற பூச்சிகள்
வட்டமடிக்கும் பூச்சிகள்
வர்ண வர்ண நிறங்களில்
இருக்கும் வண்ணத்துப்பூச்சிகள்




என்ன என்ன தேடுறாய்?
எடுக்கத் தேனா பார்க்கிறாய்?
எனது இனிய பூச்சியே !
நல்ல நல்ல பூச்சியே !



வானில் வட்டமடித்திடும்
வண்ணநிற பூச்சியே !
வானிலே நிறைந்திடும்
வண்ணத்துப்பூச்சியே !

அவிசாயினி
கொக்குவில் இந்துக்கல்லூரி.



## எமது பாடசாலை நூலகம்

1. எமது பாடசாலையில் பெரிய நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

2. இங்கு பொறுப்பாளராக திருமதி லோறன்ஸ் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

3. மேசையில் பூச்சாடிகள் அழகாக வைக்கப்பட்டுள்ளன.

4. பல கண்ணாடி அலுமாரிகளில் புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டு, இலக்கமிடப்பட்டு அடுக்கப்பட்டுள்ளன.

5. மேசைகள், கதிரைகள் ஒழுங்காகவும் அழகாகவும் அடுக்கப்பட்டுள்ளன.

6. நூலகத்தில் பல வாசகங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

7. இங்கு நான்கு பக்கச் சுவர்களிலும் காட்சிப் படங்கள் அழகாக எமது கண்களுக்குத் தெரிகின்றன.

8. இவற்றில் மோனலிசா ஓவியம் மிகவும் அழகாக உள்ளது.

9. இங்கு கதைப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், புதிர்கள், விகடத்துணுக்குகள், நகைச்சுவைக் கதைகள் போன்ற பல புத்தகங்கள் உள்ளன.

10. எமது நூலகத்திற்குச் சென்று புத்தகங்களை வாசித்து அறிவை வளர்ப்போம்.

க.கயனன், தரம் 06
கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்.

க. விமலநாதன்
உதவிக் கல்விப்பணிப்பாளர், முன்பள்ளி.
வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.

# கல்விச் சமூக ஆணிவேர் முன்பள்ளிகள்



முன்பள்ளிகள் கல்விச் சமூகத்தின் மிக முக்கிய அங்கம். முன்பள்ளிகள் பாடசாலைக் களத்திற்கு பிள்ளைகளை தயார்ப்படுத்தும் ஓர் களம்.

விவசாயிக்கு பயிர்களைத் தயார் செய்யும் நாற்றுமேடைகள் எவ்வளவு முக்கியமானதோ அதே நிலையில் முன்பள்ளிகள் ஆங்கிலத்தில்(Nursery) எனப்படும் பெயர் தமிழில் நாற்றுமேடை, குழந்தை வளர்ப்பு அரங்கம் என உள்ளது. எனவே முன்பள்ளிக் கல்விக்களம் என்பது எவ்வளவு முக்கியமானது என்பது புலனாகும்.

மொண்டசூரி அம்மையார் புரோபல் போன்ற உளவியல் அறிஞர்கள் இதுபற்றி ஆழமாகச் சிந்தித்து வெளியிட்ட கருத்துக் களில் முன்பள்ளிகள் ஓர் விளையாட்டு திடல் . அதன் குறிக்கோள்

" வாருங்கள் வாருங்கள் விளையாட வாருங்கள்" என அழைப்பதாக முன்பள்ளிகள் அமைய வேண்டும் என தெளிவுபடுத்து கின்றது.

பாலர்கள் பின் விளைவு சிந்திப் பதில்லை. அதிகம் விளையாட விரும்பு வார்கள். இருந்து படிப்பது பொறுமையைத் தராது பிள்ளைகளை சுதந்திரக்களம் வழங்கி மகிழ்ச்சிகர விளையாட்டுக்களில் அல்லது விரும்பும் செயற்பாடுகளில் செயற்பட விடுவதனூடாக, பாலர் அடையவேண்டிய தேர்ச்சி நிலைகளுக்கு அழைத்து செல்லும் முயற்சிகளில் சிறப்பாக வழிப்படுத்துமிடத்து சிறந்த செயலாளிகளை, சிந்தனை வள்ளல் களை மூளைத்திறன் விருத்தியுடன் கூடிய பாலர்களை வளர்க்க முடியும்.

- இருத்தி வைத்து போதிப்பதைத் தவிர்ப்போம் .

- பண்பாடு பழக்க வழக்கங்களை



நன்கு விளக்கி பாலர்களை மேம்படுத்து வோம்.

- பிள்ளைகளின் வளர்ச்சிக் கோலங்களை இனங்கண்டு தனியாள் வேறுபாடு அறிந்து சுதந்திர செயற்பாட்டுக் களங்களை மேம்படுத் துவோம்.

- பிள்ளைகளை சீருடை அணிதல் அழகானது என்று பிள்ளைகளையும் பெற்றோர் களையும் துன்புறுத்துவதைத் தவிர்ப் போம்.

- பிள்ளைகள் தூய்மையான இறுக்க மில்லாத ஆடையை அணிந்து மகிழ்வுடன் செயற்பட வழிவகுத்தல் செய்வோம்.

- கற்றல் கற்பித்தல் சாதனங்களை பெருக்கவும் அனுபவங்களைப் பாலர்கள் பெறுவதற்கான வழங்களைப் பெருக்கவும் முயற்சிப்போம்.

- அனைவரது ஆதரவையும் பெறுவோம்.

- பேரியக்க திறன் விருத்திக்கான ஓடுதல், பாய்தல், குனிதல், நுழைதல், எறிதல், தவழ்தல், உருள்தல் போன்ற செயற்பாடுகளுக்கான வழிகளைவசதிகளை அதிகரித்தல் செய்வோம்.

- முறைசார் கற்றல் செயற்பாடு பாடசாலைகளில் தொடங்க அதன் முதற்படியான முன்பள்ளிகளில் கண் காது கை கால் விரல் நாக்கு போன்ற உறுப்புக்களின் தசை நார்கள் விருத்தியடைய வழிசமைப்போம்.

- அப்போதுதான் பேச்சு வாசிப்பு எழுத்து போன்ற திறன்கள் விருத்தியடையும்.

- 10 வயதுக்கிடையில் 80 வீத த்துக்கு மேலாக மூளை ஒழுங்குபடுத்தப்படுவதனால் முக்கிய மூளை விருத்திக்காலம் என்பதனால் இக்காலம் மிக முக்கியமான காலமாகும். சிந்திக்க வேண்டிய காலமாகும்.

- சுதந்திர செயற்பாடுகள் மூளைத்திறன் விருத்தியை அதிகரிக்க வைப்பது.

- சிந்தனைச் செயற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும். போதிப்பது தவிர்க் கப்பட வேண்டியது. மிக மிக அவசியமானது.

- தாய்மொழிக் கல்வி மிக மிக அவசியமானது.

- மொழிகள் சகலதும் கற்பது அவசியமானது. ஆனால் ஊடகமாக வேற்று மொழியைப்பாவிப்பது தவறானது. சிந்தனை விருத்திக்கு பலரது உதவியைப் பெற எம் சமூகத்தில் மிக கஸ்டமாக உள்ளது. எனவே சிந்திப்போம் செயற்படுவோம்.

மேலும் முன்பள்ளிகள் எமது பிள்ளைகளுக்கு சிறப்பாக செயற்பட

1. ஆசிரியர்களுக்கு உதவிகள் செயகின்றோமா?

2. ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்க வழி செய்கிறோமா?


3. பிள்ளைகள் கற்பதற்கான வளங்கள் கிடைக்க முயற்சி எடுத்துள்ளோமா?

4. முன்பள்ளி முகாமைத்துவ குழுக் களை ஒழுங்கமைத்து சேவைகள் கிடைக்க வழிப்படுத்த வழி செய்துள்ளோமா?

5. அரச, அரச சார்பற்ற நிறுவனங் களை அணுகி உதவிகளையும் ஆலோசனை களையும் பெற்று முன்பள்ளியை வளம்படுத்தி உள்ளோமா?

6. மழலைகள்: எங்கள் பிள்ளைகள், எங்கள் சொத்துக்கள் . மகிழ்வுடன் ஆரோக் கியமான அனுபவங்களைப் பெறு கிறார்களா என கண்காணிக்கிறார்களா?

இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் வினாவி தீர்வு காணுமிடத்து முன்பள்ளிகள் ஒவ்வொன்றும் வளம்பெறும். எமது பிள்ளை கள் வளமாக வளர்ந்து சிறந்த சமூகம் உருவாகும்.



# மானின் உயர்ந்த குணம்

எஸ். சங்கீதா, தரம் 7E
கொக்குவில் இந்துக்கல்லூரி

ஒரு முறை ஓர் அரசன் வேட்டையாடுவதற்காகத் தன் வீரர்களுடன் காட்டுக்குச் சென்றான். அது பெரிய அடர்ந்த காடாக இருந்ததால் எந்த மிருகமும் கண்ணில் படவே இல்லை. மனம் சோர்ந்த அரசன் சற்றுத் தூரத்திலே அழகிய, உயரமான, மிக நீண்ட கொம்புகளையுடைய மான் ஒன்றைக் கண்டான்.

அந்த மானைத் தான் வேட்டையாட வேண்டும் என்று வேகமாக வீரர்களுடன் வரும் சத்தம் கேட்டு மான் வேகமாக ஓடத் தொடங்கியது. மானின் வேகத்துக்கு வீரர்களால் ஈடு கொடுத்து ஓட முடியவில்லை - குதிரையிலே இருந்த மன்னன், "நான் போய் அந்த மானைப் பிடித்து வருகிறேன். அதுவரை எனக்காக இங்கேயே காத்திருங்கள்" என்று கூறிவிட்டு மானைத் துரத்திக் கொண்டே போனான்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மான் புதர் ஒன்றிற்குள் சென்று மறைந்து விட்டது. உடனே அரசன், "குதிரையில் போனால் சத்தம் கேட்டு மான் பிறகும் ஓடத் தொடங்கிவிடும். அதனால் நடந்து சென்றே பிடிப்போம்" என்று தனக்குள் கூறிக் கொண்டே குதிரையில் இருந்து இறங்கி மான் இருக்கும் இடம் நோக்கி நடந்தான். அந்தப் புதருக்குப் பக்கத்தில் ஒரு புதைகுழி இருந்தது. ஆனால் மானைத் தேடும் ஆவலில் இருந்த அரசனின் கண்ணில் அது படவில்லை. மன்னன் புதருக்கு அருகில் செல்லும் போது தவறுதலாக அந்தப் புதைகுழிக்குள் காலை வைத்து விட்டான்.

அரசன் புதைகுழிக்குள் இருந்து வெளியே வர மிகவும் கஷ்டப்பட்டான். ஆனால் அவனால் புதை குழிக்குள் போக முடிந்ததே தவிர வெளியே வர முடியவில்லை. இறுதியில் உயிர் போய்விடும் என்ற நிலையில் மன்னன், "யாராவது என்னைக் காப்பாற்றுங்கள், எனக்கு யாராவது உதவி செய்யுங்கள்" என்று கத்தினான். ஆனால் வீரர்கள் மிகவும் தொலைவில் இருந்ததால் அவர்களுக்கு மன்னனின் குரல் கேட்கவில்லை. இறுதியில் தான் இறக்கத்தான் போகிறேன் என்று அரசன் மிகவும் வேதனை அடைந்தான்.

அப்போது அரசன் துரத்திச் சென்ற மான் மன்னனின் குரல் கேட்டு அவ்விடத்திற்கு ஓடி வந்தது. அங்கே அரசன் புதைகுழியில் இருந்து வெளியே வரப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்த மான் எதுவும் யோசிக்காமல் மன்னனிடம், "மன்னா! இதோ என் பலமான கொம்புகளை இறுக்கிப் பிடியுங்கள் நான் உங்களை வெளியே எடுக்கிறேன்" என்று கூறியது.

கொஞ்ச நேரப் போராட்டத்திற்குப் பிறகு மான் மன்னனை வெளியே எடுத்தது. மன்னன் பயத்தாலும் போராட்டத்தாலும் மிகவும் சோர்ந்து போய் இருந்தான். அதைப் பார்த்த மான், "மன்னா நீ மிகவும் களைப்பாக இருக்கிறாய் என் முதுகில் ஏறிக்கொள். உன்னை ஆற்றங்கரைக்குக் கூட்டிச் செல்கிறேன். அங்கே உன் களைப்பும்,சேற்றின் அழுக்கும் போகும் வரை குளித்து விட்டு அரண்மனைக்குச் செல்லலாம்" என்று அன்போடு கூறியது.

மன்னனுக்கோ ஆச்சரியமாக இருந்தது இந்த மானின் செயல். "தன்னைக் கொல்ல வந்தவன் என்று தெரிந்தும் இப்படி என் உயிரைக் காப்பாற்றி இவ்வளவு உதவி செய்கிறதே" என்று அதிசயப்பட்டான். மானின் மேல் ஏறி ஆற்றங்கரைக்குச் சென்று குளித்து முடித்தான்.

பின் மானைப் பார்த்து, "என்னை மன்னித்துவிடு மானே! உன்னைக் கொல்ல வந்தவன் என்று தெரிந்தும் ஆபத்தான நிலையில் இருந்து காப்பாற்றிய உன்னை எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். வெறும் சிலமணி நேரச் சந்தோசத்திற்காக உயிர்களை வேட்டையாடுவது தவறான செயல் என விளங்கிக் கொண்டேன். உயிர் அனைவருக்கும் சமம் தான். என்னுடைய இந்தச் செலுக்காக நான் வருந்துகிறேன். இனிமேல் எந்த உயிரையும் நான் கொல்லமாட்டேன். உன்னைக் கொல்ல நினைத்த என்னை மன்னித்துவிடு" என்று மனந்திருந்தி மன்னிப்புக் கேட்டான். பின்பு மான் அரசனை அவனது வீரர்கள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றது. அரசன் மானுக்கு மீண்டும் நன்றி கூறி வீரர்களுடன் நாடு திரும்பினான். திருந்திய மன்னனைப் பார்த்து மான் சந்தோசப்பட்டது.

நாமும் எமக்குத் தீங்கு செய்ய நினைப்பவர்களுக்குக் கூட நன்மையே செய்து வந்தால் அவர்களும் ஒருநாள் மனந்திருந்தி நல்லவர்களாகுவார். எனவே நாம் அனைவருக்கும் உதவி செய்யும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வோம்.

## பிரார்த்தனை

1. பிரார்த்தனை என்பது கடவுளை வழிபடுதல்.
2. நாம் வேண்டியவற்றை இறைவனிடம் பிரார்த்திக்கலாம்.
3. கடவுள் எங்கும் உள்ளவர்.
4. அதனால் நாம் சொல்வது அவருக்குக் கேட்கும்.
5. நாம் கேட்பதைத் தருவார்.
6. நாம் கடவுளிடம் பிரார்த்திப்பதால் நல்ல பலன் கிடைக்கும், நல்ல பிள்ளைகளாக வரலாம், சுகமாக இருக்கலாம், நன்றாகப் படிக்கலாம்.
7. இறைவன் மீது பக்தி செலுத்துவதன் மூலம் மலங்களில் இருந்து விடுபட்டு ஆன்ம ஈடேற்றம் பெறலாம்.
8. கடவுளிடம் பிரார்த்திக்காவிட்டால் வீரம், செல்வம், கல்வி அனைத்துமே இல்லாமல் போகும்.
9. நாம் இறைவனிடம் பிரார்த்திக்கும் இடம் கோயில் ஆகும்.
10. நாம் தினமும் கடவுளிடம் பிரார்த்திப்போம்.

பி. கானுஜன், தரம் -2 C
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

## சிந்தனைத்துளிகள்

யே. கயவதனா
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் 8G



வாழ்க்கை என்பது பெயர் தெரியாத ஊருக்கு வழி
அன்னையின் ஆசியில் ஆண்டவனைக் காணலாம்
நல்லகுரு அமைந்தால் ஆண்டவன் கொடை
நாளை என்பது இல்லை என்பதே
மலருக்கு மணம் போல் மனிதனுக்கு மானம்
நாம் பேசுவது தங்கம் என்றால் பேசாதிருப்பது வைரம்
அதிக ஒய்வு அதிக வேதனை
சரியான முடிவு என்பது அனுபவத்தால் பிறக்கிறது
அனுபவம் என்பது தவறான முடிவில் பிறக்கின்றது
பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது
மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட்டு கணப்பொழுதாயினும் உதவிசெய்வதுமேல்.
முட்டாளுடைய கேள்விக்கு மௌனமே மேலான பதில்
பேசுபவனைக் கவனியாதே அவன் பேச்சைக் கவனி
அறிவாளியின் நாவே அவன் மனம்
மௌனமாயிரு உன்னை ஆபத்து அணுகாது
பேச்சின் நீளமானது அதன் மதிப்பைக் குறைத்துவிடுகிறது
சுருக்கமாகவும் அறிவுள்ளதாகவும் இருப்பதே மேலான பேச்சு
நாவானது நம்மை பிறர் அளவிடும் துலாக்கோல்
பேசத் தெரியாதவன் கற்சிலைக்கும் மிருகத்திற்கும் ஒப்பாவான்.
இனிமையான நாவு எத்தனையோ நண்பர்களைப் பெற்று விடும்.

# பொது அறிவு

1. சீனாவின் தேசிய மலர்?
 திராட்சை மலர்
2. இங்கிலாந்தின் பழைய பெயர்?
 அங்கிலியா
3. நீருக்குள் பறக்கும் பறவை?
 பென்குயின்
4. உலகின் மிகப்பெரிய பீட பூமி?
 திபெத்
5. எகிப்தின் தேசிய மலர்?
 தாமரை
6. மனித உடலின் பெரிய உறுப்பு?
 கல் ஈரல்
7. மனித உடலின் பெரிய அங்கம்?
 தோல்
8. கூர்ப்பு கொள்கையை நிறுவியவர்?
 சாள்ஸ் டார்வின்

சு. மயூரகி,தரம் 7A.
கொக்குவில் இந்துக்கல்லூரி



# மலைநாடு

மு.யனுசியா,தரம் 8E
யா. கொக்குவில் இந்துக்கல்லூரி

மலைநாட்டுக்கு முதன் முதலாகச் செல்வது ஒரு இனிய அனுபவமாகும். தொலைவிலேயே முகில் கூட்டங்கள் போலக் காட்சியளிக்கும் குன்றுகள் அருகில் செல்லச் செல்ல நிறத்திலும் உருவத்திலும் மாறி மாறிப் புதுப்புதுக்காட்சிகளாகத் தோன்றுவது கண்கொள்ளாக் காட்சிகளாகும். மலைநாட்டினுள் பிரவேசித்துவிட்டால் சிகரங்களும் கிடு கிடு பாதாளங்களும் புதிய அனுபவங்களாக இருக்கும்.

உயர்ந்த மலைப்பகுதியில் பயணம் செய்யும் போது கீழே தெரியும் மனிதர்கள், பிராணிகள் மற்றும் கட்டிடங்களும், இன்பம் அளிக்கும் மலைச் சரிவுகளிலே கத்தரிக்கப்பட்ட தேயிலை செடிகளும், தேயிலை கொழுந்தெடுக்கும் பெண்களின் சுறுசுறுப்பும் கண்களுக்கு விருந்தாகும்.

வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதைகளும் திடீர்த்திருப்பங்களின் அனுபவங்களும், எம்மை வியக்க வைக்கும் சாலையோரங்களில் பூத்துக்குலுங்கும் மலர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இதமான குளிர்ந்த தென்றல் காற்று உடலுக்கும், உள்ளத்துக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கும்.


படிப்படியாக அமைக்கப்பட்ட நெற்காணிகளில் நெற்பயிர் பச்சைக் கம்பளமாகவும் அசைந் தாடும் மலைநாட்டு பயிர்களான கோவா, கரட், பீற்றூட் ஆகியவற்றின் செழிப்பும் கண்ணைக் கவரும் விலை மதிப்பற்ற இரத்தினக்கற்களோடு வருடம் முழுக்க மழையையும் வழங்கும் பூமி மலை நாடாகும்.

## நான் விரும்பும் பெரியார்

# ஆபிரகாம் லிங்கன்

சு.லிலோஜன் ,8D
கொக்குவில் இந்துக்கல்லூரி

அமெரிக்காவில் அடிமை முறையை ஒழிக்கப்பாடுபட்டவர் என்ற வகையில் ஆபிரகாம் லிங்கனுக்குச் சரித்திரத்தில் எப்போதும் அழியாத இடம் உண்டு. கடுமையான உழைப்பாலும் சிறந்த ஒழுக்கத்தாலும் அமெரிக்காவின் ஜனாதிபதியாக உயர்ந்தவர் ஆபிரகாம் லிங்கன். 1809 இல் அமெரிக்காவின் கென்பக்கி மாநிலத்தில் வறிய குடும்பத்தில் பிறந்தார். லிங்கனின் தந்தையின் பெயர் தோமஸ் லிங்கன். லிங்கனின் இளமைக் காலம் வறுமையில் சிரமத்தின் மத்தியில் கழிந்தது. படிக்க ஆர்வம் இருந்தும் வறுமையின் காரணமாக இவரால் அதிகம் படிக்க முடியவில்லை. லிங்கன் ஒரு பண்டக சாலையில் எழுத்தாளராகப் பணியாற்றினார். தனியாகப் படித்து வழக்கறிஞரானார். அரச தரப்பு வழக்கறிஞராகவும் பணிபுரிந்தார். இவர் இளமையில் பண்ணைத் தொழிலாளியாக மரங்கள் வெட்டுதல், காணிகள் துப்பரவாக்குதல் போன்ற பல உடலை வருத்தும் தொழில்களைச் செய்து. வந்துள்ளார். வழக்கறிஞர் தொழிலில் பிரகாசிக்க முடியாத லிங்கன் அரசியலில் ஈடுபடலாயினர்.



அமெரிக்காக் காங்கிரஸின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட லிங்கன் குடியரசுக் கட்சி சார்பாக 1861இல் அமெரிக்காவின் ஜனாதிபதியானார். லிங்கன் ஜனாதிபதியாக வந்தபோது நீக்ரோ அடிமைகளின் பிரச்சினை அமெரிக்காவில் உச்சக்கட்டத்தில் இருந்தது. அடிமைத்தனத்தை ஒழிக்கவும் நீக்ரோக் களுக்குரிய உரிமைகளை வழங்க வட மாநிலங்கள் ஆதரவாக இருந்தன. வட மாநிலங்கள் கைத்தொழிலில் வளர்ச்சி பெற்ற பகுதிகளாக இருந்ததால் அங்குள்ள பண்பாடு நீக்ரோக்களின் அடிமைத்தனத்தை நீக்குவதில் எதிர்ப்புக் காட்டவில்லை. ஆனால் தென் மாநிலங்கள் பண்ணைத் தொழில் நிறைந்த இடமாக இருந்தால் இங்குள்ள பண்ணையாளர் களுக்கு பண்ணைத் தொழிலில் வேலை செய்ய அடிமைகளை வைத்திருப்பது மலிவாக இருந்தது. இதனால் தென் மாநிலத்தவர் அடிமை முறையை ஒழிப்பதைத் தீவிரமாக எதிர்த்தனர்.

இவர்கள் வட மாநிலங்களோடு யுத்தத் திற்குத் தயாராகின. இறுதியான அடிமை முறையை ஒழிக்கவும் நாட்டைப் பிரிக்காமல் இருக்கவும் யுத்தம் ஒன்று அவசியம் என்பதை உணர்ந்து லிங்கன் தென் மாநிலங்களோடு உள்நாட்டு யுத்தம் ஒன்றில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார். நான்கு ஆண்டுகள் நீடித்த இந்த யுத்தத்தின் முடிவில் தென்மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டன. அடிமை முறை அமெரிக்க காவில் ஒழிக்கப்பட்டது. மக்களுக்காக மக்களால் நடாத்தப்படும் மக்களுடைய ஆட்சிக்கு என்ற ஜனநாயகம் பற்றிய லிங்கனின் கூற்றுக்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. 1864 இல் லிங்கன் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போது இனவெறி பிடித்த ஒரு வெள்ளை இனத்தவரால் சுட்டுக் கொல்லப்படடார்.

# கிணற்றுத் தவளையாய்

கிணற்றில் உண்டு கிணற்றில் உறங்கி
கிணறே உலகாய் கருதும் தவளையாய்
எட்டி வெளியே குதித்து வாராய்
திட்டி மீதில் ஏறிப் பாராய்.


துன்பங் கண்டு இரங்கப் பழகு
அன்பை நெஞ்சில் உணரப் பழகு
தன்னலம் மறந்து துணிவுடன் எழுந்து
உன்கண் முன்துய ருறுவோர்க் குதவு

கடவுள் தந்த கரங்கள் கொண்டு
உடனிருப் போர்க்கு உதவப் பழகு
இன்சொல் கூறித் துன்பம் போக்கு
இன்னல் களைய இறைவனை வேண்டு

வீர நரேந்திரன் வழியில் வந்தோம்
ஜீவ சேவையே குறியாய் கொண்டோம்
திரிகர ணத்தை அர்ப்பணம் செய்வோம்
பிறர்க்காய் நெஞ்சில் ஈரம் கொள்வோம்.

லி. பிரியதர்சினி, தரம் 8E
கொக்குவில் இந்துக் கல்லூரி

# வாழ்த்துகின்றோம்



புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவனும், கொக்குவில் பொது நூலக அங்கத்தவரும், சிறுவர் வட்ட மாணவனும் ஆகிய

**ச. ஜனார்த்தனன்**

அவர்களை கொக்குவில் பொது நூலகத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்

# உயர்வை அடைய

திருமதி. கலா சுந்தரேசன்
உப அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி

மனிதனாக பிறந்த ஒவ்வொரு வருடைய "மனதிலும்" மனிதம் என்பது உயர்வைக் கொண்டு இருக்க வேண்டும். அதனையே இலட்சியம் என்று கூறுபவரும் உண்டு. இதுதான் மனிதனிடத்து பல சிந்தனையைத் தூண்டு கின்றது. உலகம் பரந்து விரிந்து கிடக்கின்றது. அங்கெல்லாம் காலநிலைக்கு ஏற்ப மனிதனது நடத்தைக் கோலங்கள் அமைந்திருந்தன. சமூகம் தனக்கென ஒரு கலாசாரத்தை அமைத்துக் கொண்டிருந்தது. மகிழ்வான, அமைதியான, பண்பான வாழ்க்கையை வாழ்ந்து வந்தது.

தொடர்புசாதனங்கள் வளர்ச்சி உலகத் தைச் சுருக்கி ஒரு இடத்திலிருந்து எங்கோ நடக்கும் நிகழ்வினை கண்டுகளித்தது. அதில் எவருக்கு அந்தந்த நிகழ்வுகளில் மனம் கவருகின்றதோ அதனை தனது பண்பாட்டுக்குள் மெல்ல மெல்ல புகுத்தத் தொடங்கினான். இது மனிதனது சுய சிந்தனைக்கு கட்டுப்பாடு போடத் தொடங்கியது. "அவர்களைப் போல" என்ற சொற்பதப் பயன்பாடு தன்னை தனது மனதை தனது எண்ணத்தை மாற்றத் தொடங்கியது. முயற்சியின் பலனை ஏற்க மறுத்தது. பேராசை குடிகொள்ளப்பெற்றது. அது துன்பத்திற்கு அடிகோலியது.

எங்கு உயர்வு என்று நாம் நோக்கினால் எமக்கு முன்னோர் பதவியால் பட்டத்தால் பணத்தால் உயர்ந்து நிற்பவரை எடுகோளாக கொண்டு அதனை பார்த்தது. தனது சொந்த எண்ணத்திற்கு வரம்பு போடப்பட்டது. மக்களே கொஞ்சம் சிந்தியுங்கள்! உங்களை நீங்களே பாருங்கள். உமது மனதில் இருக்கும் எண்ணங்களை கண்டு பிடியுங்கள். அதனைக் கண்டுவிட்டால் உமது வாழ்வும் ஒரு உயர்வை அடைந்துவிடும் இல்லையேல் கட்டுப்பாட்டுக்குள் நின்றுவிடும்.

மனிதனே ! என்னையும் எனது எண்ணங்களுக்கும் மதிப்பளி அப்போதுதான் உண்மை விளங்கும். முனிவர் ஒருவர் கூறியதுபோல ஒரு ஊருக்குள் நல்ல பாம்பு உலாவிவருவது அவ்வூர் மக்களுக்குத் தெரியும், அவர்கள் எல்லோருக்கும் பயம். எப்படி பாம்பை வராது தடுப்பது என்று எண்ணிக் கொண்டு இருந்தவேளை அவ்வூருக்கு ஒரு முனிவர் வருகின்றார். அம்முனிவர் ஊர்மக்களிடம் உங்களுக்கு என்ன குறை இங்கு வாழ்வதற்கு என்று கேட்டதும் மக்கள் எல்லோரும் ஏக மனதாக சுவாமி எங்கள் ஊருக்குள் ஒரு கொடிய நாகபாம்பு வந்துபோகிறது; எமக்கு நிம்மதி இல்லை அதனை தடுத்து விடுங்கள் என்று மன்றாடினர். முனிவரும் அதற்கு உடன்பட்டு அந்த நல்லபாம்பு இருக்கும் இடத்தை எனக்கு காட்டுங்கள், என்று கூறினார். அங்கு சென்று நல்ல பாம்பை அழைத்து அதன் நடத்தைகளை கட்டுப்படுத்தினார். பாம்பும் முனிவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டது.

ஊர்மக்களுக்கு மிகுந்த சந்தோஷம் முனிவரும் போய்விட்டார். அந்த நல்லபாம்பு ஒருமுறை ஊருக்குள் வருகின்றது. அது தனக்கென்ற சுய உணர்வுகள் நடத்தைகள் எல்லாவற்றையும் விட்டு அமைதியாக வந்ததை மக்கள் கண்டதும் மக்களுக்கு துணிவு வந்தது. அவர்கள் நல்லபாம்பை எதிர்த்தனர். கல்லால் அடித்தனர். முனிவரது கதை கேட்டதனால் பாம்பு தனது சுயபுத்தியை இழந்தது. இதனால் அது அடைந்தது துன்பம்.

நீண்ட நாட்களுக்குப் பின் முனிவர் அவ்வழியால் திரும்பி வந்தார். அவ்வூர் மக்களிடம் பாம்பின் செயல்களைக் கேட்டார். அந்த நல்லபாம்பை பார்க்கச் சென்றார். அங்கே பாம்பின் கோலத்தைக் கண்டார். பாம்பிடம் சென்று உனக்கு புண்பட்ட மேனியாக்கியவர்கள் யாவர் என்று கேட்டார். பாம்பு அமைதியாக இருக்குமாறு நீங்கள் கூறியதை நான் ஏற்று நடந்ததன் விளைவு என்று கூறியது.

முனிவர் சிந்தித்தார். வார்த்தை களையும் இறை நம்பிக்கையையும் கொண் டால் மட்டும் போதாது மனிதர்களைப் புரிந்து கொள்வதுதான் முதலில் வேண்டியது. தான் தவறு செய்து விட்டதாக பாம்பிடம் மன்னிப்பு வேண்டினார். அவன் அவன் அவர்களுக்குரிய நடத்தைக் கோலங்களில் தான் வாழவேண்டும் அப்போது தான் அவன் உயர்வை அடைவான்.

பிறர் கருத்தை மதித்து ஏற்க வேண்டும். அது எமக்கு பொருந்துமா? என்று பார்க்க வேண்டும். மற்றவர் கூறியது தேவ வாக்காக அமையக்கூடாது. அது ஒருவரது உயர்வுக்கு தடைக்கல்லாக அமைந்துவிடும் எனவே உயர்வும் தாழ்வும் வாழ்க்கை வட்டம் ஆனாலும் முயற்சியும் ஊக்கமும் அதற்கான உழைப்பும் இருக்கு மானால் உயர்வை அடைய முடியும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

# தாயின் மனதிலிருந்து...

திருமதி கயல்விழி சிவகுமார்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேசசபை நல்லூர்.

என் அன்பின் மகனே !
கும்கி குட்டியே!

நான் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளும் உனக்கு வேப்பங்காயாகத்தான் இருக்கும். ஆனாலும் எனது கடமை இது. உன் ஒவ்வொரு பராயத்திலும் நீ நீயாக உன்னைத் தற்காத்துக் கொள்வதற்கும், உன் குறும்புத் தனங்களை விட்டு Ben-10 போன்று கொட்டிக்காரனாக, சுட்டிப்பையனான உன்னை கல்வியில் இலக்கை அடையச் செய்து சான்றோனாக்குவதே தாயின் கடமை.

என் கண்மணியே ! அம்மா உன்னை கண்டிக்கும் போதெல்லாம் நீ அப்பாவின் மடியில் சொகுசாக அமர்ந்து கொண்டு " பாருங்கப்பா அம்மாவை எப்பவும் எனக்கு புத்தி சொல்லிக் கிட்டே இருக்காங்க" என்பாய். அதற்கு அப்பா உன்னை அன்பாக அணைத்து செல்லமாகத் தடவிக் கொடுத்து உன் கன்னத்தில் "இச்" என்று ஒரு அன்பு முத்தம் தந்து, "அம்மா சொல்லும் அறிவுரைகளை வாழ்வில் ஒருபோதும் நீ மீறக்கூடாது ராகுலன்குட்டி" என்பார். நீயும் செல்லமாகத் தலையை ஆட்டுவாய்.

என் குட்டிப் பூந்தோட்டமே எம் குடுமபத் தில் முதல் பூத்த இனியமலர் நீ. உன் நறு மணத்தால் ஏழு ஆண்டுகள் கழித்து உனக்குப் பின்வந்த உன் சுட்டித் தங்கையும் உன்னைப் போலவே தன்னம்பிக்கை மிக்கவளாகவே வளர்கிறாள். அண்ணா கோடு போட்டால் தங்கை தாண்டக்கூடாது என்பது உன் நினைப்பு அதை உன் தங்கை நிறைவேற்றுவாள் செல்லம்.

தங்க மீன் குட்டியே ! இனி வரப்போகும் உன் குட்டிப்பாப்பாவும் உன்னைத்தான் பின்பற்றி வளர்வான். நீ எதிர்பார்த்து காத்திருப்பது போல் அண்ணனின் சொல்கேட்டு அடங்கி அண்ணாவைப் பின் தொடர்வான் கண்மணி உன் கனவைப்போல் நீ என்றும் இராமனாகவும் உன் சகோதரர்கள் இலட்சுமண பரதர்களாக உன்னைத் தொடர்வர்கள்.

என் குண்டுமணியே !

அம்மா சொல்லும் ஒவ்வொரு வார்த்தை களையும் பின்பற்றி நடந்தால் அனைவரும் உன்னை தலை நிமிர்ந்து பின்பற்றுவார்கள். அதுமட்டுமல்ல உன் 18 வயதுப் பருவம் வரை அம்மா சொல்வதை நீ கேளடா செல்லம். அதன்பின் நீ சொல்வதை அம்மா கட்டாயம் கேட்பேன் கண்ணா.

நீ எப்போதும் கூறுவாய் "நீங்கள் என்னை இப்போது உணவூட்டி, குளிப்பாட்டி, அன்பாக அரவணைப்பதைப் போல் நூறு மடங்கு உங்கள் முதுமைக் காலத்தில் நான் கடமை செய்வேன் என்று" அந்த நாளுக்கான கற்பனையை மனதில் தாங்கிய வண்ணம் உன் அம்மா! ....

## பொன் மொழிகள்.

- பேசும் முன் கேளுங்கள், எழுதும் முன் யோசியுங்கள், செலவழிக்கும் முன் சம்பாதியுங்கள்.

- சில வேளைகளில் இழப்புத்தான் ஆதாயமாய் இருக்கம்.

- யாரிடம் கற்கிறோமோ அவர் ஆசிரியர். கற்றுக்கொடுப்பவர் எல்லாம் ஆசிரியர் அல்ல.

- நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும்.

- முழுமையான மனிதர் இருவர். ஒருவர் இறந்துவிட்டார். ஒருவர் பிறக்க வில்லை.

- நல்லவருடன் நட்பாயிரு. நீயும் நல்லவராய் இரு.

- யார் சொல்வது சரி என்பதல்ல எது சரி என்பதே முக்கியம்.

- ஆயிரம் முறை சிந்தியுங்கள் ஒருமுறை முடிவெடுங்கள்.

- உண்மை புறப்பட ஆரம்பிக்க முன் பொய் பாதி உலகை வலம் வந்து விடும்.


- வாழ்வதும் விடுவதும் நமது வாழ்க்கைத்தத்துவமாக ஆக்கிக் கொள்வோம்.

# உலக சிறுவர் தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறானதொரு தினம் அனுஷ்டிக்கப் படுவதற்கான காரணம் சிறுவர்களுக்கெதிராக அரங்கேற்றப்படுகின்ற துஷ்பிரயோகங்களையும் அநீதிகளையும் இயன்றளவுச் குறைத்து அவர்களுக்கான சகலவிதமான உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதேயாகும். இன்றைய உலகம் எதிர்நோக்கும் மிக முக்கிய சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றாக சிறுவர் மீதான துஷ்பிரயோகம் விளங்குகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் என்ற விடயமானது வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் என்ற எந்தவித வேறுபாடுகளுமின்றி உலகம் முழுவதும் காணப்படும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த பிரச்சினையாக இருந்தாலும் கூடவளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் அது ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுத்து வருகின்றது. அத்தோடு சிறுவர்கள் என்போர் அவர்கள் அடுத்தவர்களில் தங்கி வாழ்கின்ற பலவீனர்களாகக் காணப்படுவதனாலேயே அவர்களது உரிமைகள் அதிகம் மீறப்படுகின்றன. இவ்வாறான உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்களில் இருந்தும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காகப் பல கொள்கைகள் மற்றும் பிரகடனங்கள் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டு வந்துள்ளன. அவற்றிடையே 1989 இல் ஐ.நா சபையில் வெளியிடப்பட்ட சிறுவர் உரிமைகளைப் பற்றிய கொள்கையானது சிறுவர்களைப் பாதுகாத்தல் தொடர்பாக குறிப்பிடத்தக்க அளவு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் ஐ.நா சபையானது 18 வயதுக்குட்பட்ட அனைவரையும் சிறுவர்கள் என வரையறுத்துள்ளது. சிறுவர்கள் எதிர்கால உலகின் அத்திவாரம் என்ற வகையில் அவர்களது எதிர்காலத்தைச் சிறப்பாக்கத் திட்டமிட்டு வழிநடத்த வேண்டும். ஆனால் இன்றைய மனித சமுதாயமானது நாகரிகத்தின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை சிறுவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தின பல்வேறு வடிவங்கள்

1. உடலியல் ரீதியான துஷ்பிரயோகம்
2. உளவியல் ரீதியான துஷ்பிரயோகம்
3. பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்
4. உணர்வு ரீதியான துஷ்பிரயோகம்
5. புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகம்

குறிப்பாக உலகில் உள்ள அனைத்து சிறுவர்களும் இவற்றுள் ஏதோவொரு துஷ்பிரயோகத்திற்கு முகம் கொடுத்தே வருகின்றனர் என்பதனை ஆய்வறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பல ஏற்பாடுகள் இன்றைய நவீன உலகில் காணப்பட்டாலும் கூட அவற்றையும் மீறி சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். மேற்படி சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளை நீக்குவதற்காக உலகின் பல அரசுகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் சமூகம் மற்றும் சமய நிறுவனங்கள் போன்றவற்றால் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மேற்படி அனைத்து நிறுவனங்களினதும் சேவைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவது அத்தியவசியமாகும். இது தொடர்பான விழிப்புனர்வை ஏற்படுத்தும் பொருட்டு உலக சிறுவர்தினத்தை சிறப்பாக திட்டமிட்டு பயன்படுத்தலாம். மேலும் சிறுவர் தினம் சம்பந்தமாக குறிப்பிட்ட தினத்தில் மாத்திரம் மும்மரமாக செயற்படுவதில் எந்தப் பயனும் இல்லை. வருடத்தில் ஏனைய நாட்களிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அனைத்து தரப்பினரதும் கவனத்திற்கு உட்பட வேண்டியது அவசியமாகும்.



SWARNA .S (BSC. in Agri)

மொட்டுக்களே திறவுங்கள் புத்தகங்களை நல்ல புத்தகங்களைப் போன்ற நண்பர்கள் இந்த உலகத்தில் எதுவும் இல்லை.




உங்கள் மனம் விரும்பிய நூல்களைப் பெற படிக்க வேண்டிய புத்தகங்களின் பெயர் பட்டியல்களுடன் வாருங்கள் கொக்குவில் நூலகத்துக்கு உங்களுக்காக காத்திருக்கின்றன நல்ல நண்பர்களாக நூல்கள்



நீங்கள் நினைப்பது புத்தகங்களில் இல்லையா உடனே எழுதுங்கள் மொட்டுக்களின் மொழியில் (கொக்குவில் நூலக சிறுவர் பத்திரிகை)

எந்த வீட்டில் புத்தகம் இருக்கின்றதோ அந்த வீடு ஒளிமயமாக இருக்கும் வாருங்கள் கொக்குவில் நூலகத்துக்கு

இலவசமாக அ்கத்தவர்களாக இணையுங்கள் இரவல் பெற்று செல்லுங்கள் நூல்களை ஒளிமயமாக்குங்கள் உங்கள் வீட்டை



**புத்தகங்களே நல்ல வாழ்க்கையை திறக்கும் சாவி**

அலுமாரி நிறைந்த புத்தகங்களை பெறும் குழந்தைகள் அதிஷ்டசாலிகள்
கொக்குவில் நூலகத்துக்கு வாருங்கள் அலுமாரி நிறைந்த புத்தகங்களை உங்கள் வசமாக்கி அதிஷ்டசாலிகள் ஆகுங்கள்

அதிக நூல்களை வாசிக்கும் அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் காத்திருக்கின்றன வாசிப்பை நேசியுங்கள் வாசிப்பு உங்கள் வாழ்க்கைக்கு கை கொடுக்கும் வாசிப்பதில் பிச்சைக்காரனாக இருங்கள்.

**எப்போதும் வாசியுங்கள்**

வாசித்து வாழ்க்கையை வளமாக்குங்கள்
சிறந்த புத்தகம் மந்திரக் கம்பளம் போல் நீங்கள் நுழைய முடியாத அதிசய உலகுக்கு அழைத்துச் செல்லும்

நல்ல நூல்களை வாசித்து நல்லவர்களாக வாழுங்கள்

உலகிலே மிகச் சிறந்தவை புத்தகங்களே!
புத்தகங்கள் பெறுமதி மிக்க சொத்துக்கள்

பழைய சட்டைகளை அணிந்து கொண்டிருந்தாலும் புதிய புத்தகங்களை வாங்க ம க்காதீர்கள்

நல்ல புத்தகங்களைப் படிக்க விரும்பாதவன் முட்டாள்

நல்ல புத்தகங்களை படித்து நல்லவர்களாக வாழுங்கள்

நிறைய வாசியுங்கள் நிறைய சாதியுங்கள்

கொக்குவில் நூலகத்துக்கு ஒருமுறை வந்து பாருங்கள்

உங்களுக்காக எத்தனை எத்தனை விதம் விதமான மகிழ்வூட்டும் நிகழ்வுகள்

- நூல் பகிர்வு
- படித்ததில் பிடித்தது
- கதை சொல்லல்
- போட்டிகள்
- அறிவூட்டும் படக்காட்சி
- கட்டாய வாசிப்பு நேரம்
- 10 புக் ரு றீட்

கண்டு களியுங்கள்...

கொக்குவில் பொது நூலகம்,
நல்லூர் பிரதேச சபை.

## கொக்குவில் பொது நூலக செயற்திட்டங்கள் (சில)


நடமாடும் நூலக சேவை -
பாடசாலைகள், முன்பள்ளிகள் ,
சனசமூக நிலையங்கள்,
மாற்றுவலுவுள்ளோர், சிறுவர் இல்லங்கள்,
முதியோர் இல்லங்கள்,
அறநெறிப்பாடசாலைகள்
பயிற்சிப் பட்டறைகள் -
கருத்தரங்குகள்
மருத்துவமுகாம்
எழுத்தாளர்களை இனங்கண்டு
கௌரவித்தல்
தொல்பொருட்களை சேகரித்தலும்,
பேணுதலும் (இருப்பவர்கள் நூலகத்துக்கு
அன்பளிப்பாக வழங்கி உதவலாம்)
நூலகவியல் மாணவர்களுக்கான
தனியலகும் அவர்களுக்கான அங்கத்துவம்,
நூலகவியல் கற்கைநெறிகளுக்கான
கட்டுரைகள், நூலக விபரப்பட்டியல்கள்,
நூல்கள் என்பவற்றை வழங்கலாம்.
மாணவர்கள், வாசகர்கள், மாற்றுவலு
உடையவர்கள் என அனைத்து
தரப்பினருக்கும் போட்டிகளை நடாத்தி
பரிசில்களை வழங்கல்
சர்வதேச தினங்களுக்கு முன்னுரிமை
கொடுத்து கொண்டாடுதல்
உலகப்புத்தகதினம், நூலகவாரம்,
உள்ளாராட்சி வாரம், வாசிப்புமாதம்
போன்ற விழாக்களுக்கு அதிக
முக்கியத்துவம் கொடுத்தல்.
புதுவரவு நூல்களை காட்சிப்படுத்தலும்
அறிமுகம் செய்தலும்
மாற்றுவலுவுள்ளோருக்கான சேவை

## கொக்குவில் பொது நூலகமும், சிறுவர் பகுதியும்

கொக்குவில் பொதுநூலகத்தில் 750 சிறுவர்களை அங்கத்தவர்களாக இணைந்து பயன் பெறுகின்றனர். 25க்கு மேற்பட்ட சிறுவர்கள் சிறுவர் வட்ட அங்கத்தவர்களாக இணைந்து நூலகத்தில் பல நிகழ்வுகளையும் செயற் பாடுகளையும் நடத்தி வருகின்றனர். ஏனை யவர்களும் இணைவதன் மூலம் சிறந்த பயனை பெறமுடியும்.

சிறுவர் பகுதியில் நூல்கள் மட்டு மல்லாது Game box என்பனவும் CDகள் மூலமான படக்காட்சிகளும் இடம்பெறுகின்றன. சிறுவர்களுக்கு போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்குதல் சிறுவர்களின் நூலகப்பாவனை வாசிப்புப் பழக்கம் என்ப வற்றை அதிகரிக்கும் நோக்கில் கூடுதலாக, தொடர்நூல்களை இரவல் பெற்ற மாணவர் களுக்கும் நூலகத்தின கூடுதலாக பயன்படுத்தி கூடுதலான நூல்களை வாசிப்பதோடு அதிகூடியளவு நேரம் வாசிப்பவர்களுக்கான சான்றிதள்களும் பரிசில்களும் வருட இறுதியில் வழங்கப்பட்டு அவர்களை ஊக்குவித்து வருகின்றோம். கதை சொல்லல், சிறுவர் அரங்கு, போட்டிகள் சிறுவர் தினம், கட்டாய வாசிப்பு நேரம், Ten book to read, Little master சிறுவர் நிகழ்வுகளையும் நூலகப்பகுதியில் நடாத்தி வருகின்றோம். சிறுவர் பகுதியை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம்

த.சத்தியமூர்த்தி - நூலகர் கொக்குவில் பொதுநூலகம்











## கொக்குவில் பொது நூலக 2014 வாசிப்புமாத நிகழ்வுகளின் பதிவுகள்













இச் சஞ்சிகை குரு பிறிண்டேஸில் அச்சிடப்பட்டு கொக்குவில் பொது நூலகத்தினால் வெளியிடப்பட்டது.